SriLankan
Airlines

# சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸின்
## ஆண்டறிக்கை 2017/18



# உள்ளடக்கம்

## நிறுவனம் மற்றும் அறிக்கை மேற்பார்வை


எமது தொலைநோக்கு மற்றும் பணி 2
முக்கிய விடயங்கள் 3


## முகாமைத்துவ அறிக்கைகள்


தலைவரின் மீளாய்வு 4
பணிப்பாளர் சபை 7
சிரேஷ்ட முகாமையாளர் 11
தொழில்முயற்சி இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு 14
முகாமைத்துவக் கலந்துரையாடலும் பகுப்பாய்வும் 16


## நிதி அறிக்கைகள்


பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை 45
சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 50
பணிப்பாளர்களின் பொறுப்பாண்மைக் கூற்றுக்கள் 51
சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை 52
நிதி நிலைமை அறிக்கை 54
இலாபம் அல்லது நட்ட அறிக்கை 55
விரிவான வருமான அறிக்கை 56
பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய அறிக்கை 57
காசுப் பாய்ச்சல் அறிக்கை 58
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் 59


## இணைப்புக்கள்


பத்து வருட மீளாய்வு 102
பாதை வரைபடம் 104
முக்கிய நிகழ்வுகள் 106
கலைச் சொல்லாக்கம் 108
கூட்டம் பற்றிய அறிவித்தல் 109
பதிலாள் படிவம் 111

கூட்டிணைப்புத் தகவல்கள் உட்புற பின் அட்டை

## எமது தொலைநோக்கு

ஆசியாவில் மிகவும் முன்னுரிமை வாய்ந்த வான் நிறுவனமாகத் திகழ்வது.

## எமது பணி

நாங்கள் வான் போக்குவரத்துத் தொழிலில் இருந்து வருகிறோம். நாங்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு நம்பகமானதும், மகிழ்ச்சி நிறைந்ததுமான பயண அனுபவத்தினை வழங்குகின்றோம். நாங்கள் எமது தொழில் பங்காளர்களுக்கு பல்வேறுபட்ட புதுமையான தொழில் நிபுணத்துவம் வாய்ந்த, பரஸ்பரம் இலாபமளிக்கும் பணிகளை வழங்கி வருகிறோம். நாங்கள் பங்குடமையாளர்களின் இலங்கை பற்றிய இலாபமளிக்கும் சந்தைப்படுத்தல் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதுடன் சமூகத்தின் நலனோம்புகைகளுக்குப் பங்களிக்கிறோம். நாங்கள் தகுதியும், முன்கூட்டிய செயற்பாடும், ஊக்கமும் கொண்ட குழுவாக இயங்குகிறோம். எங்களின் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டு அதற்கு விருதும் வெழங்கப்பட்டிருக்கிறது.

# முக்கிய விடயங்கள்

| | | குழுமம் 2018 | குழுமம் 2017 | கம்பனி 2018 | கம்பனி 2017 |
|---|---|---|---|---|---|
| **நிதியியல்** | | | | | |
| வருமானம் | ரூபா மில்லி. | 164,859.51 | 138,590.83 | 161,654.46 | 135,491.19 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | ரூபா மில்லி. | (175,254.73) | (146,080.65) | (176,104.44) | (146,760.81) |
| வரிக்கு முந்திய நட்டம் | ரூபா மில்லி. | (18,579.23) | (28,314.26) | (17,213.57) | (28,929.99) |
| ஆண்டிற்கான தேறிய நட்டம் | ரூபா மில்லி. | (18,585.15) | (28,339.51) | (17,213.57) | (28,929.99) |
| மொத்தச் சொத்துக்கள் | ரூபா மில்லி. | 71,585.14 | 55,413.77 | 67,566.96 | 51,633.63 |
| பங்குடமையாளர் நிதியம | ரூபா மில்லி. | (125,582.89) | (107,793.52) | (132,196.34) | (115,766.64) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் இயலளவு | கி.இ.கி.மீ. மில்லி. | | | 18,487.54 | 15,608.10 |
| மொத்த இயலளவு | கி.தொ.கி.மீ. மில்லி. | | | 2,549.88 | 2,167.92 |
| கொண்டு செல்லப்பட்ட பயணிகள் | வ.த.ப.கி.மீ மில்லி. | | | 15,280.78 | 12,455.05 |
| மொத்தமாக கொண்டு செல்லப்பட்ட பாரம் | வ.த.தொ.கி.மீ மில்லி. | | | 1,749.14 | 1,475.29 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 82.65 | 79.80 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 68.60 | 68.05 |
| இலாப நட்டமற்ற சுமைக் காரணி | % | | | 81.90 | 80.91 |
| **அலுவலர் உற்பத்தித் திறன்** | | | | | |
| சராசரி அலுவலர் தொகை | எண்ணிக்கை | 8,090 | 8,029 | 7,019 | 7,021 |
| ஒரு ஊழியருக்கான வருமானம் | ரூபா மில்லி. | 20.38 | 17.26 | 23.03 | 19.30 |
| **பணியிலுள்ள விமானங்கள்** | | | | | |
| A320-200 | எண்ணிக்கை | | | 5 | 6 |
| A321-200 | எண்ணிக்கை | | | 3 | 3 |
| A320neo | எண்ணிக்கை | | | 2 | 2 |
| A321neo | எண்ணிக்கை | | | 3 | - |
| A330-200 | எண்ணிக்கை | | | 6 | 6 |
| A330-300 | எண்ணிக்கை | | | 7 | 7 |
| ஆண்டின் இறுதியில் பணியிலுள்ள விமானங்கள் | எண்ணிக்கை | | | 26 | 24 |

**வருமானம் இ.ரூ பில்.**




**செயற்பாட்டிலுள்ள பயண முடிவுகள்**
**விமானங்களின் எண்ணிக்கை**



# தலைவரின் மீளாய்வு

"உலகளாவிய பொருளாதாரம், ஒரு தசாப்த காலமாகக் காணப்பட்ட வீழ்ச்சியுடன் கூடிய நிலையிலிருந்து மாறுபட்டு, வளர்ச்சியை நோக்கி திசை திரும்பியுள்ளது. 2016 இன் மத்தியில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரங்கள் வளர்ச்சி காணத் தொடங்கின. உலகளாவிய பொருளாதாரம், ஒரு தசாப்த காலமாகக் காணப்பட்ட வீழ்ச்சியுடன் கூடிய நிலையிலிருந்து மாறுபட்டு, வளர்ச்சியை நோக்கி திசை திரும்பியுள்ளது. 2016 இன் மத்தியில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரங்கள் வளர்ச்சி காணத் தொடங்கின."

"2017 ஆம் ஆண்டில், உலக பொருளாதாரத்தின் நிலையை ஒத்ததாக இருக்காது இலங்கையின் பொருளாதாரம் சற்று பின்னடைவு கண்டது. நிஜமான மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி, வரலாற்றில் மிகக் குறைந்தளவான 3.1% ஐப் பதிவு செய்திருந்தது."

தற்போதைய பணிப்பாளர் சபை 2018 ஏப்ரல் மாதத்தில் பதவியேற்றுக் கொண்டது. அப்போது அவர்கள் நிறுவனத்தின் வரலாற்றில் காணப்பட்ட பல்வேறுபட்ட பிரச்சினைகள் மற்றும் சர்ச்சைக்குரிய பொறுப்புக்களை நன்குணர்ந்து, அவற்றை ஏற்றுக்கொண்டுள்ளனர். அவர்கள், சபையில், தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் கடமையாற்றுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

### உலகளாவிய பொருளாதாரம்

உலகளாவிய பொருளாதாரம், ஒரு தசாப்த காலமாகக் காணப்பட்ட வீழ்ச்சியுடன் கூடிய நிலையிலிருந்து மாறுபட்டு, வளர்ச்சியை நோக்கி திசை திரும்பியுள்ளது. 2016 இன் மத்தியில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பொருளாதாரங்கள் வளர்ச்சி காணத் தொடங்கின. சர்வதேச மட்டத்தில், ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்பட்ட பருவினப் பொருளியல் நிலைகள் மற்றும் கொள்கைகள், சுழற்சி அடிப்படையிலான நடவடிக்கைகள் என்பன இதற்குக் காரணமாகும். சந்தையில் சாதகமான நிலைகள் ஏற்பட்டதோடு, நிதி நிலைமைகளும், பொருட்களின் விலை குறைவினால் ஏற்பட்ட குறைந்த தாக்கமும் இதற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தன. சர்வதேச பொருளாதாரம், சக்திமிக்க நிலையுடன் மீண்டும் முதலீட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு, உலக நாடுகளில் மூன்றில் இரண்டு மற்றும் வளர்ந்து வரும் சகல நாடுகளும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன. பல்வேறு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளும், இந்த வளர்ச்சியுடன் இணைந்து கொண்டுள்ளதோடு, மசகு எண்ணெய் மற்றும் ஏனைய பொருட்களின் விலைகளும் படிப்படியாக உயர ஆரம்பித்தன.

சர்வதேச நாணய நிதியத்திற்கு அமைய, உலக பொருளாதாரம் 2017 ஆம் ஆண்டில் 3.8% வளர்ச்சியை அடைந்துள்ளதோடு, கடந்த வருடத்தில் அது 3.2% ஆகக் காணப்பட்டது. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான கணிப்பீடுகள் சாதகமாக காணப்பட்டன. அவை 3.9% ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இவற்றுக்கிடையே ஏற்படக்கூடிய பொருளாதார வீழ்ச்சிகள், வர்த்தக யுத்தங்கள், நிதித்துறைப் பின்னடைவுகள் மற்றும் சர்வதேச அரசியல் நிலைமைகள் என்பனவற்றின் மூலம் இந்த சாதகமான பொருளாதார வளர்ச்சி பின்னடைவை மீண்டும் சந்திக்கலாம்.

### இலங்கையின் பொருளாதாரம்

2017 ஆம் ஆண்டில், உலக பொருளாதாரத்தின் நிலையை ஒத்ததாக இருக்காது இலங்கையின் பொருளாதாரம் சற்று பின்னடைவு கண்டது. நிஜமான மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி, வரலாற்றில் மிகக் குறைந்தளவான 3.1% ஐப் பதிவு செய்திருந்தது. சகல முக்கிய தொழிற்துறைகளுமான உற்பத்தி, சேவைகள் மற்றும் விவசாயத்துறை என்பன அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தைவிடக் குறைவான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தன. பருவினப் பொருளாதார அம்சங்களுக்கு அமைய, கடுமையான நாணயக் கொள்கைகள், சந்தையை அடிப்படையாகக் கொண்ட நாணயமாற்று விகிதங்கள் என்பன காரணமாக, வருமானத்தை மையமாகக் கொண்ட நிதிக் கொள்கைகளின் ஒன்றுசேர்ப்பு தொழிற்துறையின் வளர்ச்சிக்கு சாதகமான வருமானத்தை ஏற்றுமதிகள் மூலம் பெற்றுக்கொடுத்தது. கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கு இடையிலான வித்தியாசம் சாதகமாகக் காணப்பட்டன.

எதிர்வரும் வருடங்களில் அதிலும் மத்திய காலப்பகுதியில் எமது பொருளாதாரம் சிறந்த வளர்ச்சிகளை அடைந்து கொள்ளும் என நாம் எதிர்பார்க்கப்படுகின்றது. பருவினப் பொருளாதார அம்சங்களின் தாக்கத்தைக் குறைக்க மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மூலம், எமது பொருளாதார வளர்ச்சியை பாதிப்பின்றி முன்னெடுக்கவும், உண்மையான மொத்த தேசிய உற்பத்தியை 2020 ஆம் ஆண்டில் 4.7% வரை வளர்ச்சி பெறச் செய்யவும், சர்வதேச நாணய நிதியம் (IMF) எதிர்பார்க்கின்றது. எவ்வாறாயினும், ஒரு நாடு என்ற ரீதியில் தற்போதைய சமூக, அரசியல் மாற்றங்களிடையே எமது எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் எமக்கு கடுமையான சவால்கள் காணப்படும்.

### விமானத்துறை

சர்வதேச பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் வரலாறு காணாத எரிபொருள் விலை சரிவு மற்றும் வட்டி வீதங்கள் என்பன காரணமாக, 2017 ஆம் ஆண்டில் விமானத்துறை சிறந்த பெறுபேறுகளை

வெளிப்படுத்தியிருந்தன. உலக மொத்த தேசிய உற்பத்தியில் 1% ஐக் கொண்டுள்ள இந்த தொழிற்துறை, குறைந்த விமானக் கட்டணங்கள், அதிகரிக்கப்பட்ட செயற்பாட்டு மற்றும் வாடிக்கையாளர் போக்குவரத்துக்கள், பொருட்கள் போக்குவரத்து என்பன மூலம் தொழிற்துறை இலாபகரமான ஒரு நிலையை அடைந்தது.

இதன் காரணமாக, சர்வதேச பொருளாதார வளர்ச்சியுடன் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்பதோடு, 2018 ஆம் ஆண்டில் எமது கொள்ளளவை தாண்டிய ஒரு கேள்வி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்து, இதன் மூலம், இதுவரை காணாத வகையில் இலாபங்களை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். எவ்வாறாயினும், இந்தச் செயற்பாட்டு வளர்ச்சி, விமானத் துறையில் நிலையானதொரு வருமான வளர்ச்சியை வெளிப்படுத்தவில்லை. இதற்குக் காரணம், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2018 இல் எரிபொருள் விலை 50% அதிகரிப்பை காண்பித்துள்ளது. இதனைச் சமாளிப்பதற்காக எரிபொருள் சிக்கனத்தை அடைந்துகொள்வதற்கு புதிய விமானங்களை இணைத்துக்கொள்ளல், சிறந்த செயற்பாட்டு முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் விமான நிலையங்கள், விமானப் போக்குவரத்து என்பனவற்றில் காணப்படும் செயற்திறனற்ற நடவடிக்கைகளை அகற்றுதல் என்பனவற்றில் அரசாங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கவும் நிறுவனங்கள் செயற்பட்டு வரும். இவற்றின் மூலம் எரிபொருள் சிக்கனம், கொள்ளளவு பயன்பாடு, அதாவது, எஞ்சியுள்ள தொன் கிலோ மீற்றர்கள் (ATK) என்பன அதிகரித்து, புதிய விமானங்கள் மூலம் அதிகரித்த எரிபொருள் செலவைச் சமாளிக்க எதிர்பார்க்கப்படும்.

தொழிற்துறையில் காணப்படும் இன்னல்களில் விசேடமாக, தெற்காசியாவில் முக்கிய சர்ச்சையாக உள்நாட்டு நாணயங்களின் வீழ்ச்சி காணப்படுகின்றது. இதனால், பயணச் செலவுகள் குறைவடைந்தாலும், கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், பயணி ஒருவரின் கிலோ மீற்றருக்கான வருமானம் அதிகரித்துள்ளது. இதன் மூலம், சர்வதேச பொருளாதார வளர்ச்சி விமானப் போக்குவரத்திற்கு சிறந்ததொரு நன்மையை பெற்றுக்கொடுத்துள்ளது. நகரங்களுக்கிடையிலான இணைப்புக்கள் அதிகரிப்பதனால், பொருட்கள், மக்கள், மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் கருத்துக்கள் பரிமாறப்பட்டு குறைந்த பயணச் செலவில் உலகிற்கு நன்மையைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் வளர்ச்சி சாதகமாக இருந்தாலும், தொழிற்துறை அதனை நீண்ட காலத்தில் அடைந்துகொள்ள எதிர்பார்க்கின்றது. கொள்ளளவின் விஸ்தீரணத்தைவிட, கேள்வியின் அதிகரிப்பு மிகையாக இருப்பதனால், எரிபொருள் விலையேற்றத்தினால் ஏற்பட்ட பாதகமான நிலையைச் சமாளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வட அமெரிக்காவின் விமான சேவைகள் கணக்காய்வுக்குட்பட்ட வருடங்களில் தொழிற்துறையின் அதிகரித்த இலாபத்தைப் பதிவு செய்துள்ளது. இது, குறித்த சந்தைகள் மேலும் சக்தி மிக்கதாகவும், கொள்ளளவு வளர்ச்சியை மேற்கொண்டும் எரிபொருள் விலையேற்றத்தைச் சமாளிக்கின்றன. ஐரோப்பா, அதிகபட்ச நிலைமாற்றத்தை எதிர்நோக்க உள்ளது. விமானத்துறையில் காணப்படும் போட்டி நிலை காரணமாகவும், அதிகரித்த அரசாங்கக் கட்டணங்களினாலும் குறைந்த வருமானத்தைப் பதிவு செய்துள்ளன. ஆசிய பசிபிக் வலயத்தில், சுழற்சி முறையில் பொருட்கள் போக்குவரத்து வளர்ச்சியையும், பயணிகள் போக்குவரத்தில் தொடர் கேள்வியையும் எதிர்பார்ப்பதோடு, வலயத்தில் இலாபகரமான நிலையில் நிறுவனங்கள் செயற்பட்டு அதிகரித்த எரிபொருள் விலையை சமாளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எரிபொருள் வருமானங்கள் குறைவடைவதனால், வலயத்தில் காணப்படும் சர்ச்சைகள் காரணமாகவும், மத்திய கிழக்கில் வளர்ச்சிகள் குறைவாகவே எதிர்பார்க்கப்படுகின்றன. ஆபிரிக்காவின் பின்தங்கிய பொருளாதார நிலை மிகவும் மந்தகதியான ஒரு வளர்ச்சியை காண்பிக்கின்றது. இந்தப் பகுதியில் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்தாலும், தொழிற்துறையின் சராசரிகளுடன் ஒப்பிடுகையில் அது குறைவாகவே உள்ளன.

### விமான சேவையின் நிதி நிலைமை

எமிரேட்ஸ் நிறுவனம் 2008 ஆம் ஆண்டில் விமான சேவை முகாமைத்துவத்திலிருந்து விலகிக் கொண்டதையடுத்து, நிறுவனம் நட்டத்துடன் இயங்கி வந்தது. 2018 மார்ச் 31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் நட்டம் 17.21 பில்லியனாக காணப்பட்டது.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடிதங்களுக்கு அமைய இவ்வாறு ஏற்பட்ட நட்டங்கள் வங்கிக் கடன்களினால் ஈடுசெய்யப்பட்டுள்ளன. 2018 மார்ச் 31 ஆம் திகதிக்கு இக்கடன்களின் மொத்தம் 704 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டன. 132 பில்லியன் ரூபா மறை மிகுதி ஒன்றை ஐந்தொகை காண்பிக்கிறது. இதில் பிரதான பங்குதாரரான அரசு 90% பங்கைக் கொண்டுள்ளதோடு, புதிய பணிப்பாளர் சபை ஒன்றையும் நியமித்துள்ளது. இதற்கு காரணமாக, கம்பனிகள் சட்டத்தின் 219 மற்றும் 220 ஆம் பிரிவுகளுக்கு அமைய சாதகமற்ற ஒரு நிறுவனமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்சிகளைக் கடந்து வருவதில் காணப்பட்ட ஒரேயொரு வழி அரசாங்கத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட தொடர் ஒத்துழைப்பு மற்றும் அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட மீளமைப்பு மற்றும் அந்த மீளமைப்பினால் நிறுவனத்தை இலாபகரமான ஒன்றாக மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் காட்டும் ஈடுபாடு என்பனவாகும். அதற்கமைய, புதிய பணிப்பாளர் சபையின் பிரதான பொறுப்பாக மீளமைப்பு நடவடிக்கைகள் காணப்பட்டன.

### நல்லாட்சிக்கான ஈடுபாடு

பணிப்பாளர் சபையை நியமித்த பின் முதலாவது நடவடிக்கையாக, நல்ல ஆளுமைக் கட்டமைப்பு ஒன்றை நிறுவனத்தில் உருவாக்க வேண்டியிருந்தது. அனைத்து ஆர்வம் காட்டுவோரின் பங்கேற்புடன் இது இடம்பெற்றது. இதற்கமைய விமானத்துறை அனுபவமுள்ள திறமைமிக்கவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

### முகாமைத்துவ மாற்றங்கள்

நிறுவன நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது, மிக முக்கிய பங்கை பிரதம நிறைவேற்று அதிகாரியும், முக்கிய முகாமைத்துவப் பிரிவினரும் மேற்கொள்வதனால், அவர்களைத் தெரிவு செய்வது மிகவும் முக்கியமாக காணப்பட்டது.

## தலைவரின் மீளாய்வு தொடர்ச்சி.

திறமை வாய்ந்த உத்தியோகத்தர்களைக் கொண்டு இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு சபை தொடர்ச்சியாக அவதானம் செலுத்தி வந்துள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம், எமிரேட்ஸ் நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட காலப்பகுதியில் பிரதம நிதி அதிகாரியாக செயற்பட்ட திரு. விபுல குணதிலக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இப்பதவியை ஏற்றுக்கொள்ளும் வரையில், எமிரேட்ஸ் நிறுவனத்தின் ஆபிரிக்க தேசிய விமான சேவையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகச் செயற்பட்டு வந்துள்ளார். இந்த ஆபிரிக்க விமான சேவையை இலாபகரமான ஒரு சேவையாக மாற்றும் குழுவில் இவரும் ஒரு அங்கத்தவராகத் திகழ்ந்துள்ளார். இவர் அடையாளம் காணப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு, குழும பிரதம செயற்பாட்டு மற்றும் நிதி அதிகாரியாக 2018 ஜுலை இறுதியளவில் நியமிக்கப்பட்டார். பணிப்பாளர் சபை, அவரது செயற்பாடுகளை மீளாய்வு செய்து, அவரை பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் நியமித்துள்ளது. முன்னர் பொறியியல் பிரிவின் தலைவராக செயற்பட்டு வந்த திரு. டீ.ஏ.ஜீ.ஜயசூரிய, பிரதம தொழில்நுட்ப அதிகாரியாகவும், விமான நடவடிக்கைகள் பிரிவின் தலைவராக செயற்பட்டு வந்த கெப்டன் ரஜின்ட் ரத்னதுங்க பதில் பிரதம சேவை வழங்குநர் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர். சிரேஷ்ட முகாமைத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிரதம வர்த்தக அதிகாரியொருவரை நியமிப்பதற்கு பணிப்பாளர் சபை எதிர்பார்க்கின்றது.

**நிறுவனத்தை இலாபகரமாக்கும் ஒன்றிணைந்த நடவடிக்கை**

அனைத்து ஆர்வம் காட்டுவோரும் இணைந்து செயற்பட்டால் நிறுவனத்தை மீண்டும் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்ற முடியும் என தற்போது செயற்பாட்டிலுள்ள குறுகிய காலம் செயற்பட்டு வந்த பணிப்பாளர் சபை எதிர்பார்க்கின்றது, அதிமேதகு ஜனாதிபதி நிறுவனத்தை மீளமைப்பதற்கு அரச கொள்கைகள் ரீதியில் நிபுணத்துவ குழு ஒன்றை நியமித்துள்ளமை பெறுமதிக்கதொரு நடவடிக்கையாகும். குறித்த நிபுணத்துவக் குழு, அவர்களது பரிந்துரைகளை தற்போது சமர்ப்பித்துள்ளதனால் குறித்த பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு வெகு விரைவில் சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஐந்தொகையை மீளமைப்பதற்கு நீண்டகாலமாக இருந்து வந்த கடன் தொகைகளை அகற்றி விட வேண்டும் என்பது சந்தேக மின்றி நிரூபணமானதொரு உண்மையாகும். நிறுவனத்திற்கு புதிதாக மூலதனம் தேவைப்படுகின்றது.

எவ்வாறாயினும், நிறுவனத்திற்கு மூலதனத்தை இடுவதன் மூலம் மட்டும் அதனை ஒரு இலாபகரமான ஸ்தாபனமாக மாற்றியமைத்துவிட முடியாது. அதற்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஒரு மீளமைவு அத்தியாவசியமாகும். இதனை அடைந்துகொள்ள சில பாரிய மாற்றங்கள் தேவையாக உள்ளன. தற்போதைய வலையமைப்பை மாற்றியமைத்தல், விமானங்களின் பயன்பாட்டை அதிகரித்தல், செலவுகளைக் குறைத்தல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களுடன் செலவுகளைக் கட்டுப்படுத்தி போட்டியை எதிர்கொள்ளுதல் என்பன இவற்றில் பிரதான அம்சங்களாகும். பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இணைந்து அண்மையில் உபாயகரமான திட்டம் ஒன்றை வகுத்துள்ளன. அதன் மூலம் நிறுவனத்தின் உபாயகரமான பயணப் பாதையை புதிய வர்த்தகத் திட்டங்கள் மூலம் அடைந்து கொள்ளவும், தற்போதுள்ள வர்த்தக நடவடிக்கைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சகல பிரிவினதும் தியாகங்களை இது எதிர்பார்க்கின்றது. இதற்கமைய சபையானது, நிறுவனம் இலாபத்தை அடையும் வரை எந்தவிதமான ஊதியத்தையும் நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள மாட்டாது என உறுதியளித்துள்ளது. இதேபோன்று சிரேஷ்ட முகாமைத்துவ ஊழியர்கள் இவ்வருட சம்பள உயர்வைப் பெற்றுக்கொள்ளாதிருக்க இணங்கியுள்ளனர். நிதி கண்ணோட்டத்தில் இவற்றின் மூலம் குறிப்பிடத்தக்க பெறுபேற்றை அடைந்துகொள்ள முடியாதிருந்தாலும் நிறுவனம் ஒரு மாற்றத்தை எதிர்நோக்குகிறது என்பதை இது பிரதிபலிக்கிறது.

நாம் சர்வதேச மட்டத்தில் போட்டிமிக்க ஒரு தொழிற்துறையில் இருக்கின்றோம். நாம் வெற்றியடைவதற்கு போட்டியாளர்களின் அளவுக்கோ அல்லது அவர்களைவிடச் சிறந்தவர்களாக இருக்க வேண்டும். செயற்பாட்டுச் செலவினங்கள், தொழிற்துறையின் செலவுகளுக்குச் சமமாக இருக்க வேண்டும். பணிப்பாளர் சபையினால் தலையிடப்பட்ட வலுவிழந்த முகாமைத்துவத்துவம் நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளை தனிப்பட்ட நோக்கங்களுக்காக செயற்படுத்துகிறது. இது போன்றவற்றை இல்லாதொழித்து, ஊழியர்களுக்கு சமமான நிலையை ஏற்படுத்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்துச் செலவினங்களும் நிறுவனத்திற்கு சமமாக பிரித்துக் கொடுக்கப்பட்டு, நிறுவனத்தின் செயற்பாடுகள் இலாபமற்றதாக மாறியுள்ளது.

பணிப்பாளர் சபையானது, முகாமைத்துவத்திற்குத் தேவையான வகையில், புதிய உபாயகர திட்டங்களைச் செயற்படுவத்துவதற்குத் தேவையான உதவிகளை வழங்கி, வர்த்தகத்தை எதிர்பாத்த மாற்றங்களுக்கு உட்படுத்தி, விமான சேவையை இலாபகரமான ஒன்றாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

**இறுதியாக**

எமது சபை நியமிக்கப்பட்ட இந்தக் குழுகிய காலத்தில், சகல பிரிவுகளின் ஊழியர்களும் எமக்கு அளித்த ஒத்துழைப்பிற்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்காலத்தில் சக்திமிக்க, இலாபகரமான, தேசிய விமான சேவை ஒன்றாகவும், ஆசியாவின் மிகச்சிறந்த ஒரு விமான சேவையாகவும் எமது நிறுவனத்தை மாற்றியமைக்க அவர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளே வலுவானதொரு எதிர்பார்ப்பு உள்ளது, எதிர்காலத்தில் அவர்களின் பங்களிப்பையும், ஈடுபாட்டையும் இதற்காக நான் எதிர்பார்க்கின்றேன். எமது பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்துவத்தினருக்கு அவகள் நடைமுறைப்படுத்தியுள்ள முன்னுதாரணம் மிக்க செயற்பாட்டிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறுதியாக தேசிய விமான சேவையின் நன்மை கருதி எதிர்கால சிந்தனையோடு தனிப்பட்ட விதத்தில் கவனிப்பை பெற்றுக்கொடுத்து, நிறுவனத்தை சிறந்த பாதையில் இட்டுச் செல்வதற்காக செயற்படும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு எனது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜீ.எஸ்.விதானகே**
*தலைவர்*

*2019 பெப்ரவரி 28*

# பணிப்பாளர் சபை

## ஜீ.எஸ்.விதானகே (தலைவர்)

ஜீ.எஸ்.விதானகே, வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் 2018 நவம்பர் 30 ஆம் திகதி பணிப்பாளராக இணைந்து கொண்டார். அதன் பின்னர் அவர் சிறிலங்கன் கேட்டரிங் நிறுவனத்தில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

அவர், இலங்கை நிர்வாக சேவையில் ஒரு முன்னணி அதிகாரியாவார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவப் பிரிவில் விஞ்ஞான இளமானி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ள அவர், இலங்கை நிருவாக சேவையில் 1984 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் முதுமானிப் பட்டம் பெற்றவராவார்.

பொது நிர்வாக அமைச்சில் உதவி பணிப்பாளராக தனது பணியை ஆரம்பித்தார். 1990 ஆம் ஆண்டில் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்ட அவர், அதன் பின்னர் பாதுகாப்பு அமைச்சில் உதவி செயலாளர் பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

திரு. ஜீ.எஸ்.விதானகே, 1995 ஆம் ஆண்டில் ஊடகம், சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சில் உதவி செயலாளராக நியமிக்கப்பட்டார். அதில் மிகக் குறுகிய காலம் செயலாற்றிய அவர், சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராக அதன் பின் பதவி உயர்வு பெற்றார். ஜீ.எஸ்.விதானகே, 2002 ஆம் ஆண்டில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சில் மேலதிகச் செயலாளராக இணைத்துக் கொள்ளப்பட்டார். 2012 ஆம் ஆண்டு வரை இப்பதவியை வகித்து வந்த திரு. ஜீ.எஸ்.விதானகே, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றார். தற்போதைய பதவியை மேற்கொள்ளும் வரை அவர் குறித்த பதவியை வகித்து வந்த்துள்ளார்.

மேலே கூறப்பட்ட பதவிகளை வகித்து வரும் காலப்பகுதியில் திரு. ஜீ.எஸ்.விதானகே இலங்கையின் பல்வேறு வெளிநாட்டு தூதுக்குழுக்களில் பதவிகளை வகித்துள்ளார். சார்க் வலய பல்வகை போக்குவரத்து கருத்தரங்கு 2006 மே மாதம் கொழும்பில் இடம்பெற்ற போது அதன் தலைவராக செயற்பட்டுள்ளார். இதற்கு மேலதிகமாக அவர், கொழும்பு செயற்பாடுகளுக்கான ஐந்தாவது அமைச்சரவை ஆலோசனையை ஏற்பாடு செய்துள்ளதோடு (வெளிநாட்டுக்கு பணியாளர்களை அனுப்பி வைக்கும் நாடுகளின் வலய ஆலோசனை செயற்பாடுகள்) 2016 ஆகஸ்ட் 25 ஆம் திகதி இலங்கையில் இது இடம்பெறும் போது 2003 ஆம் ஆண்டுக்கு மேலதிகமாக குறித்த ஆண்டிலும் இரண்டாவது முறையாக தலைமைத்துவத்தைப் பெற்றிருந்தார். மேலும் திரு. ஜீ.எஸ். விதானகே, அபுதாபி பேச்சுவார்த்தையின் நான்காவது அமைச்சரவை ஆலோசனையை ஏற்பாடு செய்திருந்தார். இது 2017 ஜனவரி 24 ஆம் திகதி இடம்பெற்றது, இந்த நிகழ்வில் தலைவராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

செப்டம்பர் 18 முதல் திரு. ஜீ.எஸ்.விதானகே, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளராக பதவி ஏற்றுக்கொண்டார்.

## எயார்மார்ஷல் கபில ஜயம்பத

இலங்கை விமானப் படையின் தளபதிபதி -
WWV, RWP, RSP & three Bars, VSV, USP, MSc (IntRel), MMSc(Strat Stu-China), MIM(SL), fndu(China), qhi

எயார்மார்ஷல் கபில ஜயம்பதி 2018 மார்ச் 29 ஆம் திகதி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

கபில வீதிய பண்டார ஜயம்பதி, இலங்கை விமானப் படையில் பொதுச் சேவைகள் விமானி பிரிவில் கடேட் அதிகாரியாக 1982 ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் திகதி இணைந்து கொண்டார். ஹெலிகொப்டர் பறக்கும் பயிற்சியில் அடிப்படை மற்றும் உயர்தர பயிற்சியை முடித்துக் கொண்டதும், விமானப்படை வரலாற்றில் தகைமை கொண்ட மிகவும் இளமையான ஹெலிகொப்டர் பயிற்றுவிப்பாளராக (qhi) தேர்ந்தெடுக்கப்பட்டார். தரங்களில் படிப்படியாக உயர்ந்ததையடுத்து ஈவிரக்கமற்ற பயங்கரவாதிகளான எல்ரிரிஈ யினரைத் தோற்கடிக்கும் யுத்தங்களில் மிகவும் முக்கிய வீரராக அங்கீகரிக்கப்பட்டார்.

விசேட படை அணியாக தாக்குதலை நடத்திய இலங்கை விமானப்படையின் பாதுகாப்பு மற்றும் காப்பாற்றல் வீரர்களின் விமானத்தளம் ஒன்றை அறிமுகம் செய்து ஸ்தாபிப்பதற்கான பெருமையை அவர் பெற்றுக் கொண்டார். 1989 ஆம் ஆண்டு யுத்தத்தின் போது காயமடைந்த எயார்மாஷல் ஜயம்பதி, யுத்தத்தில் முதலாவதாக வீர காயமடைந்த இலங்கை விமானப்படை வீரர் என்ற கௌரவத்தையும், உயிரையும் சொத்துக்களையும் பாதுகாத்த துணிகரத்தை அங்கீகரித்த "தேஷபுத்ர சம்மானய" என்ற விருதை அணியும் பெருமையையும் பெற்றுக் கொண்டார். எதிரிகளை எதிர்த்து துணிகரமான நடவடிக்கைகளை வெளிப்படுத்தியதற்கென "ரணவிக்ரம பதக்கம", "வீரவிக்கிரம விபூஷணய" ஆகிய விருதுகளையும் நான்கு தடவைகள் "ரணசூர பதக்கம" விருதுகளையும் பெற்றுக்கொண்டவர் வீரபுருஷர் எயார்மார்ஷல் ஜயம்பதி ஆவார்.

37 வருடத்திற்கும் மேற்பட்ட காலம் நீடித்த இராணுவ சேவையில் அதிக எண்ணிக்கையான விமான அணிவகுப்புக்களுக்குத் தலைமை தாங்கியதோடு, விமானத்தள தளபதி என்ற உயர் அதிகாரியின் நியமனத்தையும் திருகோணமலை சீனன்குடா, இலங்கை விமானப்படை அக்கடமியில் தளபதியாகவும், தள தலைமை அதிகாரியாகவும் நியமனம் பெற்றிருந்தார். இவற்றுக்கு மேலதிகமாக, எயார்மார்ஷல் கபில ஜயம்பதி, விமானப்படை முகாமைத்துவ சபையில் யுத்த ஏற்பாட்டியல் பணிப்பாளராகவும், விமானப்படையின் முன்னேற்றம் மற்றும் நவீனமயப்படுத்தல் என்பனவற்றுக்கு அதிகளவில் பேருதவி புரிந்த விமானப்படை நடவடிக்கைகளின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இலங்கை விமானப்படையினால் இவர் மீது வைக்கப்பட்ட நம்பிக்கை, அவரது ஆணை, தலைமைத்துவம், இராணுவத்தின் தொழில்சார் இராணுவ அதிகாரி என்பனவற்றுக்கு உண்மையான சான்று பகர்ந்தது. விமானப்படையின் தளபதி என்ற பதவியில் அவர் நியமிக்கப்பட்ட சமயம், விமானப்படை சேவையின் உச்சக்கட்டத்தை அடைந்ததோடு, 2016 செப்டம்பர் 11 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எயார்மார்ஷல் என்று பதவியுயர்வு பெற்றார். விமானப்படையின் தளபதி என்ற பதவி வகிக்கும் எயார்மார்'ல் ஜயம்பதி, இலங்கை விமானப்படையின் எதிர்கால முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில் "இலக்கு 2025" ஐ அமைத்ததோடு, அதன் தகைமைக்கு முக்கியத்துவம் அளித்து, வரலாற்றின் அடிப்படையில் வழிநடத்தி, ஆசியாவில் தொழில்நுட்ப

பணிப்பாளர் சபை தொடர்ச்சி.

ரீதியில் மிகவும் முன்னேற்றமும் நவீனமயமும் கண்ட விமானப்படையாக மாற்றியுள்ளார்.

நாட்டிற்காக வழங்கிய அதிகௌரவம் மிக்க மாசற்ற சேவையைக் கருத்திற் கொண்டு, 2018 ஆம் ஆண்டில் "உத்தம சேவா பதக்கம" மற்றும் "விசிஷ்ட சேவா விபூஷனய" என்பனவற்றோடு பல்வேறு விருதுகளையும், பதக்கங்களையும் இவர் பெற்றுள்ளார். இராணுவ சேவையோடு இணைந்ததாக எயார்மார்'ல் கபில ஜயம்பதி பாதுகாப்பு, யுத்தக்கலை, சர்வதேச உறவுகள் என்பனவற்றிலும் உயர்ந்த அறிவைக் கொண்ட கல்விமானாக திகழ்ந்ததோடு, பாகிஸ்தான் பிரெஸ்டன் பல்கலைக்கழகத்திலிருந்து சர்வதேச உறவுகள் துறையில் விஞ்ஞான முதுமாணி என்ற பட்டத்தையும் பெற்றதோடு, சீனாவின் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இருந்து போர்த்திறன் சார்ந்த கல்வியில் MMSc பட்டத்தையும், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியினதும், ஹாவாட் பல்கலைக்கழகத்தினதும் பழைய மாணவன் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். நாட்டிற்கான அதியுயர் சேவையையும், நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிய தேசிய இலக்கிற்கான அர்ப்பணத்தையும் கருத்திற் கொண்டு, அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எயார்மார்ஷல் கபில ஜயம்பதியை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்

## கலாநிதி ரோஷன் பெரேரா

கலாநிதி ரோஷான் பெரேரா, வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் 2018 மார்ச் 29 ஆம் திகதி பணிப்பாளராக இணைந்து கொண்டார். அதன் பின்னர் அவர் சிறிலங்கன் கேட்டரிங் நிறுவனத்தில் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு 2018 மே 08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட கலாநிதி ரோஷன் பெரேரா, பின்னர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேட்டறிங் நிறுவனத்திற்கும் நியமிக்கப்பட்டார். இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரான இவர், இதற்கு முன்னர், பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் ஆகிய பதவிகள் உட்பட மத்திய வங்கியில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை அரச நிறுவனங்கள் அபிவிருத்தி அமைச்சில் (MPED) கடமையாற்றவென அவர் இரண்டாம் நிலை நியமனத்தை வழங்கப் பெற்றிருந்தார். இங்கு கடமையாற்றிய காலத்தில் அரச உடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் மீளமைப்பு, அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் ஆகியோருக்கான சிறந்த ஆளுமை பற்றிய கைந்நூலை மீளமைத்தல் என்பனவற்றில் முழு அளவில் ஈடுபட்டிருந்தார். அரச நிறுவனங்களில் பணியாற்றும் பணிப்பாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள் ஆகியோருக்கு கூட்டிணைப்பு ஆளுமையில் பயிற்சியளிக்கும் வழிமுறைகளைத் தயாரித்துள்ளார்.

உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் என்பனவற்றின் ஆலோசகராகக் கடமையாற்றிய இவர், மெல்பர்ன் பல்கலைக்கழகத்திலும், இலங்கை கொள்கைகள் கல்வி நிறுவகத்திலும் ஆராய்ச்சித்துறை அங்கத்தவராகவும் பணியாற்றியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார இளமாணி (சிறப்பு) மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் பொருளாதார கலாநிதி ஆகிய தகைமைகளைக் கொண்டுள்ள இவர், முகாமைத்துவப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CIMA) இறுதிப் பரீட்சையிலும் சித்தியெய்தியுள்ளார்.

## சுசந்த கட்டுகம்பல

டொன் சுசந்த கட்டுகம்பள, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு 2018 மார்ச் 29 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அதன் பின் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலும் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

இலங்கையைத் தாயகமாகக் கொண்டவரும், தற்சமயம் அவுஸ்திரேலியாவில் பிரபல சட்டத்தரணியாக இருப்பவருமான தொன் சுசந்த கட்டுகம்பல, கடந்த 29 வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து புறப்பட்டு அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்து, மெல்பர்னின் பிரபல மொனாஸ் பல்கலைக்கழகத்தில், LLB இளமாணி பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்துள்ளார். தெற்கு அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் மற்றும் விக்டோரியா உயர் நீதிமன்றம் என்பனவற்றில் இணைந்து கொண்ட அவர், அடிலெயிட்டிலும், மெல்பர்னிலும் சட்டத்துறை சார்ந்த நடவடிக்கைளை மேற்கொண்டார். குடிவரவு, வர்த்தகச் சட்ட நடவடிக்கைகளை 1838 ஆம் ஆண்டில் ஆரம்பித்ததும், தெற்கு அவுஸ்திரேலியாவில் நீண்டகாலம் சேவையாற்றி வருவதுமான அடிலெயிட்டில் சட்டத்துறை நிறுவனமான Knox and Hargrave இல் 1998 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டார். ஆரம்ப காலத்தில் Knox and Hargrave நிறுவனத்தின் சார்பில் வர்த்தகச் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட அவர், 1999 ஆம் ஆண்டில் மெல்பர்ன் நகரில் சட்டத்துறை நிறுவனமான Fairfields ஐ ஆரம்பித்தார்.

அவர், அவுஸ்திரேலிய சட்டக் கழகத்தின் அங்கத்தவராகவும், விக்டோரியா சட்ட நிறுவனத்தின் அங்கத்தவராகவும், அமெரிக்கன் சட்ட சங்கத்தின் (ABA) சர்வதேசப் பிரிவினதும், Law Asia வினதும் அங்கத்தவராகவும் உள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் Fairfields Lawyers நிறுவனத்தை 1999 ஆம் ஆண்டில் ஸ்தாபித்த திரு. தொன், அவுஸ்திரேலிய குடிவரவு வர்த்தகச் சட்ட ஆலோசனைகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நிறுவனம் புகழும் பிரபல்யமும் அடையும் வகையில் புனரமைத்துக் கொண்டார். சீனா, ஜப்பான், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, டுபாய், இலங்கை போன்ற நாடுகளில் நிறுவனங்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் அவுஸ்திரேலியாவில் கம்பனி அமைப்பை ஸ்தாபிக்கவும், அவுஸ்திரேலிய பங்குதாரர்களுடனான கூட்டு வர்த்தக உடன்படிக்கை உட்பட அவுஸ்திரேலியாவில் முதலீடுகளைத் திரட்டிக்கொள்ளவும், நிறுவனங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருப்பதற்கும், அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அவுஸ்திரேலிய வங்கிகளுடன் நிதித்துறை ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும் முதலீட்டாளர்களின் வீஸா விடயங்கள் சம்பந்தமாகவும் பெறுமதிமிக்க ஆலோசனைகளை திரு. தொன் வழங்கியுள்ளார்.

இலங்கையைத் தாயகமாகக் கொண்டு, அவுஸ்திரேலியாவில் வாழும் சர்வதேச அனுபவம் வாய்ந்த சட்டத்தரணி என்ற வகையில், நாடுகள் பலவற்றின் வாடிக்கையாளர்களின் விடயங்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதில் அவர் பாரிய அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அதிக எண்ணிக்கையான இலங்கை மக்கள் அவுஸ்திரேலியாவில் சட்டபூர்வமாகக் குடியமர அவர் உதவியுள்ளார். அவுஸ்திரேலிய - இலங்கை மருத்துவ உதவிக் குழுவின் (AUSLAMAT) ஸ்தாபக அங்கத்தவர்களுள் ஒருவராக இருந்த திரு. கட்டுகம்பல, இலங்கையில் மருத்துவ உதவி தேவைப்பட்டவர்களுக்கு இலட்சக்கணக்கான டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளார்.

இலங்கை சட்டத்தரணியான இவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் அபிவிருத்தியடைவதற்கு அவுஸ்திரேலியாவில் வழங்கிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை கடந்த பல வருடங்களாக அவுஸ்திரேலிய மக்கள் அங்கீகரித்து கௌரவித்துள்ளனர். அவுஸ்திரேலியாவில் செரந்திப் சமூக அபிவிருத்தி விருதான "சிறந்த சட்டத்தரணி" விருது, தொடர்ச்சியாக மூன்று வருட காலமாக இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையை விட்டு வெளியேறிய மக்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரவும், இலங்கைக்கு இன்று மிகவும் அத்தியாவசியமான அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடவும் அவர் தொடர்ந்தும் அயராத முயற்சி மேற்கொண்டுள்ளார்.

## எஸ்.ஜீ.சேனாரத்ன

**CPFA(UK), FCA, FCMA, FPFA, MAAT, B Com (Sp), HNDC, DPFM, PGD**

எஸ்.ஜீ.சேனாரத்ன, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் திறைசேரியின் பிரதிநிதியாக 2018 மே 21 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அதன் பின் அவர், ஸ்ரீலங்கன் கெட்டறிங் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

அவர், திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகமாக இருந்ததோடு, தற்சமயம், அதே திணைக்களத்தில் ஆலோசகர் என்ற பதவியில் சேவையாற்றி வருகின்றார். கணக்கியல் மற்றும் அறிக்கையிடல், நிதித்துறை முகாமைத்துவம், திட்ட முகாமைத்துவம், அரச நிறுவனங்களின் கண்காணிப்பு ஆகிய துறைகளில் 41 வருடகாலம் என்ற பாரிய அனுபவத்துடன் தனது சக்தி முழுவதையும் பொதுத் துறையின் அபிவிருத்திக்கென அர்ப்பணித்துள்ளார். திரு. சேனாரத்ன ஐக்கிய இராச்சியத்தின் அரச பட்டய நிதித்துறை (CPFA) கணக்காளராவார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (FCA), இலங்கை முகாமைத்துவ கணக்காளர் சான்றிதழ் நிறுவனம் (FCMA), இலங்கை அரச நிதி கணக்காளர் சங்கம் (FPFA), இலங்கை கணக்கியல் தொழில்நுட்பவியலாளர் சங்கம் (FMAAT) என்பனவற்றில் அங்கத்தவராகவும் உள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக இளமாணி (விசேடம்), பொலி தொழில்நுட்ப நிறுவனத்தின் வர்த்தக துறையில் உயர் தேசிய டிப்ளோமா, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலிருந்து (SLIDA) நிதித்துறை முகாமைத்துவத்தில் டிப்ளோமா, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திலிருந்து வர்த்தக மற்றும் நிதித்துறை நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா ஆகிய பட்டங்களையும் அவர் பெற்றுள்ளார்.

அவர், கல்வித் திணைக்களத்தில் ஒரு ஆசிரியராக தமது சேவையை ஆரம்பித்தார். 7 வருட காலம் ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்ததையடுத்து, இலங்கை கணக்காளர் சேவையில் இணைந்துகொண்ட அவர், பல திணைக்களங்கள், அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், வெளிநாட்டு நிதியுதவி கொண்ட திட்டங்கள் என்பனவற்றில் கணக்காளர், பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி, பணிப்பாளர் நாயகம் போன்ற பதவிகளை வகித்துள்ளதையடுத்து தற்சமயம் ஆலோசகராகச் சேவையாற்றி வருகின்றார். தமது சேவைக்காலத்தின் போது பல்கலைக்கழகங்கள், SLIATE, வங்கிகள், அரசதுறை நிறுவனங்கள் என்பனவற்றில் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார்.

அரச அடைமான மற்றும் முதலீட்டு வங்கி, புத்தளம் உப்பு நிறுவனம், இலங்கை கணிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம், மாந்தை உப்பு நிறுவனம், கல்லோயா பெருந்தோட்டங்கள், அக்கரபத்தன பெருந்தோட்டங்கள், அரச அதிகாரிகள் நலன்புரி சங்கம், இலங்கை அரச நிதித்துறை கணக்காளர் சங்கம், வாகன புகை வெளியேற்ற பரிசோதனை நம்பிக்கை நிதியம், நிதித்துறை உட்கட்டமைப்பு பராமரிப்பு நம்பிக்கை நிதியம் மற்றும் தற்சமயம் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் என்பனவற்றின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக திரு. சேனாரத்ன சேவையாற்றி வருகின்றார்.

## ஜொஹ்ஹான் விஜேசிங்க

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு 2018 மே 08 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஜொஹ்ஹான் விஜேசிங்க, பின்னர் சிறிலங்கன் எயார்லைன்ஸ் கேட்டறிங் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்சமயம் ஹேய்லீஸ் விமானப் போக்குவரத்துத் துறை மற்றும் திட்டங்கள் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும், ஹேய்லீஸ் குழுமத்தின் கிளையான அலுபாப் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் சேவையாற்றி வருகின்றார். ஹேய்லீஸின் ஜேவி நிறுவனமான எஸ் அன்ட் ரீ உள்ளகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும், ஹேய்லீஸ் குழும முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். விமானப் போக்குவரத்துத்துறை, ஹொட்டேல் அபிவிருத்தி, நிர்மாண முகாமைத்துவம், அலுமினிய கட்டுமானக் குழுமத்தின் உள்ளக அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பனவற்றுக்கு இவர் பொறுப்பாக உள்ளார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்கு மேலதிகமாக, ஹேய்லீஸ் குழுமத்தின் 17 நிறுவனங்கள் மற்றும் வெலிபல் வன் என்பனவற்றின் பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

ஹேய்லீஸ் நிறுவனத்தில் இணைந்துகொள்ள முன்னர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் பல்வேறு சிரேட்ட பதவிகளை ஜொஹ்ஹான் விஜேசிங்க வகித்துள்ளார், தூரகிழக்கு, ஐரோப்பிய நாடுகள், மத்திய கிழக்கு, கொழும்பு தலைமை அலுவலகம் என்பன இவற்றுள் சிலவாகும். விமான நிறுவனத்தின் சிரேட்ட முகாமைத்துவக் குழுமத்திலும் இவர் அங்கத்தவராக உள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துடனான ஜொஹ்ஹானின் தொடர்புகள் 1983 ஆம் ஆண்டில் எயார்லங்காவில் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுப் பயிற்சியாளராக இவர் இணைந்து கொண்ட காலத்திலிருந்து ஆரம்பிக்கின்றன. இதனைத் தொடர்ந்து, 14 வருட காலத்தில் விமான நிறுவனத்தின் சிரேஷ்ட பதவிகளை வகிக்கும் சந்தர்ப்பம் ஜொஹ்ஹானுக்குக் கிடைத்தது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுடனான இரண்டாம் நிலை தொடர்புகள் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பித்தன. 05 வருட காலத்தின் பின்னர் பதவியிலிருந்து விலகும் வரை விமான சரக்குப் பிரிவின் தலைவராக கடமையாற்றியுள்ளார்.

ஜொஹ்ஹான் விமானம் மற்றும் விமான சேவைகள் துறையில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவராவார்.

ஐக்கிய இராச்சியம், லெய்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இருந்து MBA பட்டத்தைப் பெற்றுள்ள இவர், சந்தைப்படுத்தல் பட்டய நிறுவகத்தின் (ஐக்கிய இராச்சியம்) அங்கத்தவருமாவர்.

## பணிப்பாளர் சபை தொடர்ச்சி.

### சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பீ டி சில்வா

சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன பீ டி சில்வா MBBS, MD, MDc(Oxon), FRCP (லண்டன்), FCCP, AGAF, FNASSL, வைத்திய ஆலோசகர், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு 2018 மே 21 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அதன் பின் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலும் அவர் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

தற்சமயம், களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் சிரே்ட பேராசிரியராகவும், நவலோக தனியார் வைத்தியசாலையில் வைத்திய ஆலோசகராகவும் கடமையாற்றி வருகின்றார். இலங்கை போதைப்பொருள் தடுப்பு முகவர் நிலையத்தின் (SLADA) தலைவராகவும், தெற்காசிய பிராந்திய போதைப்பொருள் தடுப்பு முகவர் நிலையத்தின் (SARADO) தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். SLADA யை ஸ்தாபிப்பதற்கு காரணகர்த்தாவாகவும், போதைப்பொருள் தடுப்பு சம்பந்தமான புதிய சட்டங்களை அறிமுகம் செய்வதற்கும் இவர் பின்னணியில் இருந்துள்ளார். தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழுவின் ஆணைக்குழு அங்கத்தவராகவும், கொழும்பு மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் சபை அங்கத்தவராகவும், Gastroenterology உலக சஞ்சிகையின் இணை ஆசிரியராகவும் பல்வேறு சர்வதேச சஞ்சிகைகளின் மீளாய்வு ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட திணைக்கள தலைவர், Gastroenterology யின் ஆய்வுச் சபையின் தலைவர், இலங்கை Gastroenterology மற்றும் Digestive Endoscopy சங்கத்தின் செயலாளர், விளையாட்டுத்துறை மருத்துவத்தின் பணிப்பாளர் நாயகம், வரையறுக்கப்பட்ட ஜோர்ஜ் ஸ்டுவர்ட்ஸ் நிதி நிறுவனத்தின் தலைவராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் கழக அங்கத்தவர், லண்டன் ஒலிம்பிக்ஸின் குழு வைத்தியர் ஆகிய பதவிகளை வகித்த பேராசிரியர் டி சில்வா, தேசிய கிரிக்கட் குழுவின் மருத்துவ குழுவிலும் அங்கத்தவராக உள்ளார்.

கல்கிசை சென் தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்ற அவர், மருத்துவ இளமாணி, சத்திர சிகிச்சை இளமாணி, ஆகிய பட்டங்களை கொழும்பு வடக்கு மருத்துவக் கல்லூரியில் இருந்து பெற்றுக் கொண்டதோடு, மருத்துவக் கலாநிதி (முதல் நிலை) என்ற பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் இருந்து பெற்றுக்கொண்டார். ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகத்தின் MSc பட்டத்தைக் கொண்டுள்ள இவர், Gastroenterology யின் பதிவாளராகவும், ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்பர்ட் ரெட்கிளிப் இன்பர்மரியில் ஆராய்ச்சித்துறை அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். Gastroenterology யின் சபை அத்தாட்சிப்படுத்தப்பட்ட பயிற்சியாளராகவுள்ள இவர், FGGP யை பெற்றுக்கொண்டதையடுத்து, றோயல் மருத்துவ அதிகாரிகள் கல்லூரியின் (FRCP லண்டன்) உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டார். அமெரிக்கன் Gastroenterology சங்கத்தின் (AGAF) உறுப்பினரான இவர், இலங்கை தேசிய விஞ்ஞானக் கழகத்தின் (FNASSL) உறுப்பினராகவும் கடமையாற்றினார். 2001, 2006, 2008, 2010, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகள் உட்பட பல்வேறு ஆராய்ச்சி விருதுகளை இவர் வென்றெடுத்துள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்

### விபுல குணதிலக

*குழும பிரதம நிறைவேற்று அதிகாரி*

2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதி முதல் இடைக்கால குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக திரு. விபுல குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. குணதிலக, ஸ்ரீ லங்கனுடன் இணைய முன்னர் TAAG அங்கோலா எயார்லைன்ஸ் நிறுவனத்தில் பிரதம நிதி அதிகாரியாக செயற்பட்டு வந்துள்ளார். எமிரேட்ஸ் நிறுவனம் TAAG யைக் கொள்வனவு செய்தது முதல் TAAG யின் பணிப்பாளர் சபைக்கு அவர் பரிந்துரை செய்யப்பட்டிருந்தார். 2017 ஜுலை மாதம் முடிவுக்கு வந்த எமிரேட்ஸ் மற்றும் அங்கோலா அரசாங்கத்தின் பங்காளித்துவக் காலப்பகுதியிலும் குறித்த சபையில் அவர் மீள நியமிக்கப்பட்டார். விபுல அவர்களால் வழங்கப்பட்ட தலைமைத்துவத்தின் கீழ் அங்கோலாவின் தேசிய விமான சேவை இலாபகரமான நிலையை அடைந்து, குறுகிய காலத்தில் சிறந்த காசுப்பாய்ச்சலை வெளிப்படுத்தியது. ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை எமிரேட்ஸ் நிறுவனம் முகாமைத்துவம் செய்யும் போது, பிரதம நிதி அதிகாரியாக திரு. விபுல செயற்பட்டு வந்தார். எமிரேட்ஸிடமிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் பரிமாற்றப்பட்ட போது அவர் அதில் முக்கிய பங்கை ஆற்றினார். இலங்கை, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் முன்னணி நிறுவனங்களில் பல முக்கிய பொறுப்புக்களை அவர் வகித்துள்ளார். CIMA Sri Lanka வலய சபையின் முன்னாள் தலைவராக செயற்பட்ட அவர், இலங்கையின் கணக்காய்வு மற்றும் கணக்கியல் தராதரங்கள் மேற்பார்வை சபையில் பணிப்பாளராகக் கடமையாற்றினார். அத்துடன், அவர் மேலும் பல பணிப்பாளர் பதவிகளையும் வகித்துள்ளார். CIMA UK யின் தோளமை உறுப்பினர் ஒருவரான அவர் CA ஸ்ரீலங்கா CPA - அவுஸ்திரேலியா என்பனவற்றினதும் தோளமை உறுப்பினராவார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் MBA பட்டம் பெற்றவராவார்.

### ட.ஏ.ஜீ.ஜயசூரிய

*பிரதம தொழில்நுட்ப அதிகாரி*

திரு. ட.ஏ.ஜீ.ஜயசூரிய 2018 செப்டம்பர் 01 ஆம் திகதி பிரதம தொழில்நுட்ப அதிகாரியாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் இணைந்து கொண்டார்.

1982 ஆம் ஆண்டில் எயார் லங்கா என நிறுவனம் அழைக்கப்பட்ட காலப்பகுதியில் சிரேஷ்ட அனுமதிப்பத்திரம் பெற்ற பொறியியலாளராக அவர் நிறுவனத்தில் இணைந்து கொண்டார். 2009 ஆம் ஆண்டு வரை பல்வேறு முகாமைத்துவப் பதவிகளை அவர் வகித்து வந்துள்ளார். அதன் பின்ன அவர், ஓமான் எயார் நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமையாளர் (தொழில்நுட்ப ஒப்பந்தங்கள்) பதவியை வகித்து வந்துள்ளார். 2016 ஆம் ஆண்டில் அவர், இலங்கையில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையில் வானூர்தி செல்லத்தக்க நிலைக்கான பணிப்பாளராக இணைந்து கொண்டார்.

திரு. ஜயசூரிய அவர்களுக்கு விமானப் பழுதுபார்ப்பு பொறியியல் அனுமதிப்பத்திரம் ஐக்கிய இராச்சியத்தில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் CAA விமான பழுதுபார்ப்பு பொறியியல் அனுமதிப்பத்திரத்தையும் CAA இலங்கை விமான பழுதுபார்ப்பு அனுமதிப்பத்திரத்தையும் அவர் கொண்டுள்ளார்.

### கப்டன் ரஜின்ட் ரணதுங்க

*பறப்புத் தொழிற்பாடுகளின் பதில் பிரதம அதிகாரி*

பறப்புத் தொழிற்பாடுகளின் தலைவரான கப்டன் ரஜின்ட் ரணதுங்க 1987இல் பயிற்சி விமானியாகக் கம்பனியில் இணைந்து கொண்டவர். அவர் எயார் பஸ் விமானத் தொகுதியை தொழிற்படுத்துவதற்கு முன்னராக அவர் டு1011 தொடர்பில் இரண்டாவது அலுவலராகவும், முதலாவது அலுவலராகவும் படிப்படியாக முன்னேறியவர். உயர் முகாமைத்துவத்தில் அவரின் வகிபாகத்தின் துணை அம்சமாக கப்டன் ரணதுங்க பதவி குறித்துரைக்கப்பட்ட தற்போதைய A330 விமானத் தொகுதியின் பரிசோதனை விமானியாகவும் இருந்து வருகின்றார்.

### தல்றின் திருக்குமார்

*கம்பனிச் செயலாளர் / கம்பனிகள் செயலகப் பணிகளின் தலைவர்*

தல்றின் திருக்குமார் 2013இல் கம்பனியில் கம்பனிச் செயலாளராக இணைந்து கொண்டார். அவர் கம்பனிச் செயலாளராகவும் கம்பனி செயலகப் பணிகளின் தலைவராகவும் பதவி வகிக்கின்றார். இப்பிரிவானது, சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட், சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட் என்பனவற்றிற்குச் செயலகப் பணிகளை வழங்குவதுடன் இதற்குப் புறம்பாக, மூத்த முகாமைத்துவ சம்பளக் கொடுப்பனவுப் பட்டியலுக்கும் வசதியளிக்கிறது. அவர் சிறிலங்கன் கெயர் றஸ்ற்றிற்கான நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் இருக்கின்றார்.

இவர் பகிரங்க கம்பனிகளின் கம்பனிச் செயலக நடைமுறைகள் துறையில் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டிருப்பதுடன் பன்முகப்படுத்தப்பட்ட இரண்டு பாரிய குழுமங்களில் சிரேஷ்ட பதவிகளை வகித்திருக்கின்றார்.

திருமதி. திருக்குமார் இலண்டன் செயலகங்கள் மற்றும் நிருவாகத்திற்கான பட்டய நிறுவகத்தில் இணை உறுப்பினராக இருப்பதுடன் வியாபார நிருவகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் (அவுஸ்திரேலியா) பெற்றுள்ளார். இவரும் இலங்கை பணிப்பாளர் நிறுவனத்தின் உறுப்பினராவார்.

### யசந்த திசாநாயக்க

*நிதியியல் முகாமைத்துவத் தலைவர்*

2004இல் கம்பனியில் இணைந்து கொண்ட திரு. யசந்த திசநாயக்கா, நிதியியல் முகாமைத்துவத் தலைவர் பதவியை வகித்து வருகின்றார். கம்பனியின் நிதி மற்றும் வர்த்தக ரீதியான கொள்வனவு நடவடிக்கைகள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவர், இரு ஆசிய பிராந்திய விருதுகளுக்கு விதந்துரைக்கப்பட்டுள்ள முதலாவது சர்வதேச முறி வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியியல் என்பன உட்பட கம்பனிக்கான பல முன்னோடி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களை பல முனைகளில் மேற்கொண்டவர். இவர் புதிய A330-300 விமானத் தொகுதியின் பொருட்டு விநியோகத்திற்கு முன்னரான நிதியிடல் வடிவமைப்பதற்குத் தூண்டுதலாக இருந்ததுடன், இதனை 2014இல் “இவ்வாண்டிற்கான விநியோகத்திற்கு முன்னரான நிதியிடல் உடன்படிக்கை” என எயார் பினான்ஸ் சஞ்சிகை அங்கீகரித்திருக்கிறது. கம்பனியில் இணைவதற்கு முன்னர் திரு. திசாநாயக்க முதலீட்டு வங்கித்தொழில் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துறைகளில் சிரேட் பதவிகளை வகித்தவராவர். தொழில்முறைக் கணக்காளரான இவர் (முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகம், ஐக்கிய இராச்சியத்தின் உறுப்பினராவர்) வேல்ஸின் காடிவ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் பெற்றிருக்கிறார்.

## சிரேஷ்ட முகாமைத்துவம் தொடர்ச்சி.

### சிறிமந்தக சேனாநாயக்க
*மனிதவள பிரிவின் பதில் தலைவர்*

விமானப் போக்குவரத்துத் துறையிலும், சர்வதேச உறவுகள் மற்றும் அவை சார்ந்த சட்டரீதியான நடவடிக்கைகளிலும் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிக கால அனுபவம் பெற்ற ஒரு பிரபல சட்ட வல்லுனராவார். பல்வேறு சட்டபூர்வ, இருதரப்பு மற்றும் பல்தரப்பு நடவடிக்கைகளில், விசேடமாக இருதரப்பு விமானப் போக்குவரத்து உடன்படிக்கை / வர்த்தகப் பேச்சுவார்த்தைகள், இருதரப்பு வர்த்தக உடன்படிக்கை ஏற்பாடுகள் மற்றும் சர்வதேச பல்தரப்பு கட்டமைப்பு உருவாக்கம் என்பனவற்றில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவராவார்.

தற்போது, மனிதவள பிரிவின் (பதில்) தலைவராகப் பணியாற்றி வரும் அவர், சர்வதேச உறவுகள் சம்பந்தமான சிரேஷ்ட முகாமையாளர் பதவியில் ஏற்கனவே கடமை புரிந்து வருகின்றார். அதில் அவர், சர்வதேச ரீதியில் வர்த்தக Code shares பங்காளி விமான நிறுவனங்களுடன் விமானப் போக்குவரத்து உரிமைகள் சம்பந்தமாகப் பேரம் பேசும் நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கன் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, அரச தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்களைத் தீர்மானிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

எமது நிறுவனத்தை பின்வரும் சர்வதேச மாநாடுகளில் அவர் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். / படுத்தி வருகின்றார்:

- இலங்கையின் தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கை உருவாக்கக் குழு உறுப்பினர் (NCAP 2016)
- Oneworld அலாயன்ஸ் முகாமைத்துவ சபையில் (OMB) ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் பிரதிநிதியாக செயற்பட்டு வருகின்றார்.
- IATA பயணிகள் / முகவர் கருத்தரங்கில் (PAConf) ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பிரதிநிதி

அவர், இதற்கு முன்னர் 2011 ஜனவரி - ஜுன் வரை ஸ்ரீலங்கன் நிறுவனத்தில் பதில் மனிதவள பிரிவுத் தலைவராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

### பிரதீப கெகுலாவல
*ஆதனங்கள் மற்றும் ஏற்பாடுகள் தலைவர்*

2011 ஆகஸ்ட் மாதம் முதல் 2019 ஜனவரி வரை மனித வளங்கள் பிரிவின் தலைவராகக் கடமையாற்றிய திரு. பிரதீப கெகுலாவல தற்சமயம் என்ற பதவியை வகித்து வருகின்றார்.

திரு. பிரதீப கெகுலாவல கம்பனித் துறையில் 2 தசாப்தங்களுக்கு மேற்பட்ட முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்ட சிரேஷ்ட மனிதவள அபிவிருத்தியில் சிறந்ததொரு தொழில்சார் நிபுணராவர். அவர், மனிதவள அபிவிருத்திக் கலையில் 20 ஆண்டுகளுக்கு மேல் தனது ஈடுபாடுகளைக் காட்டுவதற்கு முன்னர் செயற்றிட்ட முகாமைத்துவம், பொது முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார அபிவிருத்தி ஆகிய துறைகளில் பணிப்பாளர், பொது முகாமையாளர் ஆகிய முக்கிய முகாமைத்துவப் பதவிகளை வகித்தவர். பிரதீப மனிதவளத்தின் தலைவராக சிறிலங்கன் எயார்லையின்ஸ்ஸில் இணைவதற்கு 08 ஆண்டுகளுக்கு முன்னராக, கல்வி, அலுவலக தன்னியக்கப்படுத்தல், பொறியியல் மற்றும் ஆடைத் துறைகளிலுள்ள பல்வேறு முன்னணிக் கம்பனிகளில் மனிதவளத் துறையின் தலைவர் பதவிளை வகித்திருக்கின்றார்.

கொமன்வேல்த் ஒவ் லோர்னிங்கிலிருந்தான எம்பிஏ பட்டம், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்தான அறிவுசார் முகாமைத்துவத்தினைச் சிறப்புத் துறையாகக் கொண்டு தகவல் முகாமைத்துவத்தில் எம்எஸ்சி பட்டம் என்பன உட்பட முகாமைத்துவம், மனித வளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப் பின்படிப்புத் தகைமைகளைக் கொண்டிருக்கின்றார். இவர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திலிருந்தும் மனிதவள முகாமைத்துவத்தில் நிறைவேற்று பயிற்றுவிப்பிற்கான பட்டத்தினையும் இலங்கையில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திலிருந்து பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

### மயூகா ரணசிங்க
*குழும சட்ட அலுவல்கள் தலைவர்*

2009இல் கம்பனியில் இணைந்து கொண்ட இவர், சிறிலங்கன் குழுமத்தின் குழும சட்ட அலுவல்கள் தலைவர் பதவியை தற்பொழுது வகித்து வருகிறார். எயார்லையினில் இணைந்துகொள்ள முன்னர் அவர் நீதிமன்ற நடவடிக்கையிலும், அதனைத் தொடர்ந்து தொலைத்தொடர்பூட்டல் துறையிலும் பணியாற்றியிருக்கின்றார். அவர், சிக்கலான நடவடிக்கைகளைக் கையாளுதல், அமைப்பியல் மற்றும் பல்வேறு மட்டங்களில் நாடுகளுக்கிடையேயான வர்த்தக ஒப்பந்தங்கள், பல்வேறு நியாயாதிக்க வழிகாட்டல்கள் மற்றும் பிணக்குகளைத் தீர்த்தல், ஒழுங்கு முறைப்படுத்தல் அலுவல்கள், புலமைச் சொத்து மற்றும் பல்வேறு நியாயாதிக்கங்களில் தொழில்நிலைப் பிரச்சினைகள் என்பனவற்றில் பெறுமதிமிக்க அனுபவங்களைப் பெற்றிருக்கின்றார். தொழில்முறையில் சட்டத்தரணியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பட்டதாரியாவார். கொழும்பு பல்கலைக்கழத்திலிருந்து சட்டத்தில் முதுமாணிப் பட்டத்தினையும், வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிருவாகத்தில் முதுமானிப் பட்டத்தினையும் இவர் பெற்றுள்ளார்.

### சாமர பெரேரா
*தகவல் தொழில்நுட்பவியல் தலைவர்*

1999இல் எயார்லையினில் இணைந்து கொண்ட சாமர பெரேரா, 2012 இலிருந்து தகவல் தொழில்நுட்பவியல் தலைவர் பொறுப்பினை வகித்து வருகிறார். அவர் தரைத் தொழிற்பாடுகளிலிருந்து விமான நிலையங்கள் உட்பட, விமானத்திற்குள்ளேயான இணைப்புக்கள் வரையான விமானப் போக்குவரத்து தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தினையும், உலகளாகவிய அலுவலகங்கள் மற்றும் எயார்லையின் மற்றும் குழுமத்தின் உபாய ரீதியான வியாபார அலகுகளையும் மேற்பார்வை செய்து வருகின்றார்.

திரு. சாமர, விமானப் போக்குவரத்தில் விரைந்த பயணப் புத்தாக்கத் தீர்வுகளை உள்ளடக்கிய அயட்டாவின் வியாபார நிகழ்ச்சித் திட்டத்தினை இலகுபடுத்தும் நடவடிக்கைகளுக்கு முன்னோடியாகச் செயற்பட்டார். எயார்லையினின் தகவல் தொழில்நுட்பத்தின் ஆளுகைத் தளத்தினை முழுமையாக உறுதிப்படுத்துகின்ற உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப இணங்குவிப்புக்களுக்கு முன்னோடியாகவும் செயற்பட்டவர். இலங்கையின் தகவல் தொழில்நுட்பம் ஐஎஸ்ஓ/ஐஈசி 27001:2013 தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், ஐஎஸ்ஓ 9001:2008 மென்பொருள் தரமுகாமைத்துவம் மற்றும் ஐஎஸ்ஓ/ஐஈசி 20000:2011 தகவல் தொழில்நுட்பப் பணிகள் முகாமைத்துவம் என்பனவற்றிற்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட எயார்லையின் தகவல் தொழில்நுட்பச் சூழல் முறைமையின் வீச்சு ஒன்றிற்குள் எயார்லையினின் வியாபாரம் மற்றும் தொழிற்பாடுகளின் டிஜிட்டல் உருவாக்கத்திற்கு முன்னின்றவர்.

தொழில்சார் பொறியியலாளரான இவர், இலங்கை, மொறட்டுவ பல்கலைக்கழத்திலிருந்து இலத்திரனியல் மற்றும் தொடர்பூட்டல் பொறியியலில் விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும், ஐக்கிய இராச்சியத்தின் எயார்செஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தினை விசேடமாகக் கொண்ட வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றிருக்கின்றார்.

### சாமர ரணசிங்க

*தலைமைச் சரக்கு தலைவர்*

திரு. சாமர, 2013இல் கம்பனியில் தலைமைச் சரக்கு அலுவலராக இணைந்து கொண்டார்.

இவர், வாடிக்கையாளர் பணிகள், சரக்குப் பதிவுகள், சரக்குகளின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் விமான நிலையத் தொழிற்பாடுகள் ஆகிய துறைகளில் விமான நிறுவனச் சரக்கு மற்றும் விமானப் போக்குவரத்து தொழில் துறையில் 18 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டவர்.

கம்பனியில் இணைவதற்கு முன்னர் இவர் இலங்கையில் தொழிற்படுகின்ற சர்வதேச புகழ்வாய்ந்த விமான நிறுவனங்களில் பல சிரேஷ்ட முகாமைத்துவப் பணிகளை ஆற்றியுள்ளார்.

### சுமுது உபதிஸ்ஸ

*வருமான முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் வர்த்தக உதவித் தலைவர்*

2000ஆம் ஆண்டில் பயிற்சி நிறைவேற்று அலுவலராகக் கம்பனியில் இணைந்து கொண்ட இவர், நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்து கொண்டமையினைத் தொடர்ந்து 2001இல் வர்த்தகப் பிரிவிற்கு மாற்றலாகிறார். தொழில்துறையில் 17 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்ட இவர் பன்னாட்டுத் தொடர்புகள், அட்டவணை கொண்ட திட்டமிடல், வலையமைப்பு மற்றும் வருமானத் திட்டமிடல், வருமான முகாமைத்துவம் என்பனவற்றில் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முகாமைத்துவ அனுபவங்களைக் கொண்டவர். இவர் 2017இல் வருமான முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் வர்த்தக உதவிகளின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சிறி ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான திரு. உபதிஸ்ஸ, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தினையும், எயார்லையின் கற்கையில் அயட்டாவின் டிப்ளோமா பட்டத்தினையும் (மொன்றியல்) சந்தைப்படுத்தலுக்கான பட்டய நிறுவனத்திலிருந்து (ஐக்கிய இராச்சியம்) சந்தைப்படுத்தலில் பட்டப்பின் படிப்பிற்கான டிப்ளோமாவையும் பெற்றிருப்பதுடன் இதில் அவர் அசோசியேட் உறுப்பினருமாவர்.

### திமுது தென்னக்கூன்

*உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத் தலைவர்*

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் தொகுதயை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு சபை பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

கம்பனியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியினதும் தொகுதியினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.
- ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றினை வழங்குவதற்கு தொகுதியின் நிதி தகவல்கள் அல்லது வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுள்ளேன். வழிநடத்தல், மேற்பார்வை மற்றும் குழுக் கணக்காய்வினை மேற்கொள்ளுதல் எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மட்டுமே பொறுப்பாக உள்ளேன்.

நான் கணக்காய்வில் அவதானித்த உள்ளகக் கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலான திட்டமிடப்பட்ட விடய எல்லை மற்றும் கணக்காய்வு காலம் மற்றும் முக்கியமாக கணக்காய்வு கண்டுபிடிப்புகள் அகிய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருடன் நான் தொடர்பு கொண்டேன்.

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- கணக்காய்வுக்கு அவசியமானதும், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுவதும், முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றமை போன்ற எல்லா தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றிருக்கின்றேன் என்றும்,
- கம்பனியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்.**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

**எச். எம். காமினி விஜேசிங்ஹ**

*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# நிதி நிலைமை அறிக்கை

| மார்ச் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | குழுமம் 2018 இ.ரூ மில். | குழுமம் 2017 இ.ரூ மில். | கம்பனி 2018 இ.ரூ மில். | கம்பனி 2017 இ.ரூ மில். |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் | 4 | 10,348.22 | 9,834.07 | 8,154.98 | 7,712.19 |
| விமானங்களின் வழங்கலுக்கு முன்னரான கொடுப்பனவு | 5 | 2,528.12 | 2,528.12 | 2,528.12 | 2,528.12 |
| விமானப் பேணல் ஒதுக்கு | 6 | 20,724.17 | 8,135.68 | 20,724.17 | 8,135.68 |
| விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | | 5,820.58 | 5,616.48 | 5,820.58 | 5,616.48 |
| அருவச் சொத்து | 7 | 248.30 | 653.36 | 206.17 | 625.65 |
| முதலீடுகள் | 8 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 39,669.79 | 26,768.11 | 37,476.46 | 24,660.56 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புக்கள் | 9 | 4,755.98 | 4,502.67 | 4,421.51 | 4,215.57 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவை | 10 | 18,266.51 | 15,515.18 | 17,296.91 | 14,559.72 |
| விமானப் பேணல் ஒதுக்கு | 6 | 6,226.64 | 6,501.62 | 6,226.64 | 6,501.62 |
| விமானம் மற்றும் உதிரி எந்திர வைப்புக்கள் | | 74.68 | 72.84 | 74.68 | 72.84 |
| முதலீடுகள் | 8.1 | 749.96 | 292.94 | 589.59 | 292.94 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 11 | 1,841.58 | 1,760.41 | 1,481.17 | 1,330.38 |
| | | 31,915.35 | 28,645.66 | 30,090.50 | 26,973.07 |
| **மொத்த சொத்துக்கள்** | | 71,585.14 | 55,413.77 | 67,566.96 | 51,633.63 |
| | | | | | |
| **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 12 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
| ஒதுக்கீடுகள் | 13 | 4,620.38 | 4,209.36 | 2,782.72 | 2,371.38 |
| ஒன்றுதிரட்டிய இழப்பு | | (181,820.71) | (163,620.32) | (186,596.50) | (169,755.46) |
| மொத்தப் பங்கு மூலதனம் | | (125,582.89) | (107,793.52) | (132,196.34) | (115,766.64) |
| | | | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | | |
| முன்னுரிமைப் பங்குகள் | 14 | 1,000.00 | 1,000.00 | - | - |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 15 | 44,556.66 | 27,914.74 | 44,497.74 | 27,914.74 |
| ஏனைய நீண்டகாலப் பொறுப்புக்கள் | 16 | 25,490.05 | 13,742.57 | 24,906.95 | 13,182.98 |
| | | 71,046.71 | 42,657.31 | 69,404.69 | 41,097.72 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| வண்டிகளின் முன்கூட்டிய விற்பனைகள் | 17 | 23,629.03 | 18,778.71 | 23,629.03 | 18,778.71 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்படத்தக்கவை | 18 | 34,561.86 | 39,136.89 | 38,924.46 | 44,925.29 |
| செலுத்தத்தக்க வருமான வரி | | 191.68 | 211.28 | 175.45 | 175.45 |
| வட்டியையுடைய பொறுப்புக்கள் | 15 | 67,738.75 | 62,423.10 | 67,629.71 | 62,423.10 |
| | | 126,121.32 | 120,549.98 | 130,358.61 | 126,302.55 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 197,168.03 | 163,207.29 | 199,763.30 | 167,400.27 |
| **மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | 71,585.14 | 55,413.77 | 67,566.96 | 51,633.63 |

இந்நிதியியல் கூற்றுக்கள் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**யசந்த திசாநாயக்க**
*நிதி முகாமைத்துவத் தலைவர்*

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பாக இருக்கிறது.
சபைக்காகவும், சபையின் சார்பிலும் பின்வருவோரினால் ஒப்பமிடப்படுகிறது.

**ஜீ.எஸ்.விதானகே**
*தலைவர்*

**எஸ்.ஜீ.சேனாரத்ன**
*பணிப்பாளர்*

59 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புக்களும், இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

28 பெப்ரவரி 2019
கொழும்பு

# இலாபம் அல்லது நட்ட அறிக்கை

| மார்ச் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | குழுமம் 2018 இ.ரூ மில். | குழுமம் 2017 இ.ரூ மில். | கம்பனி 2018 இ.ரூ மில். | கம்பனி 2017 இ.ரூ மில். |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | 20 | 164,859.51 | 138,590.83 | 161,654.46 | 135,491.19 |
| **செலவினம்** | | | | | |
| விமான எரிபொருள் செலவினம் | | (47,037.86) | (33,129.60) | (47,037.86) | (33,129.60) |
| ஊழியர் செலவினம் | | (20,897.26) | (20,012.56) | (19,482.99) | (18,793.79) |
| விமானம், பாதைகள் மற்றும் பயணிகள் செலவினம் | | (25,248.56) | (21,302.32) | (28,667.79) | (23,788.17) |
| குத்தகை விமானம் மீதான வாடகை | | (25,726.29) | (22,789.22) | (25,726.29) | (22,789.22) |
| விமானப் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவினம் | | (22,829.07) | (17,644.09) | (22,829.07) | (17,644.09) |
| தேய்மானம்/பதிவழிப்பு | | (1,976.04) | (2,326.30) | (1,779.49) | (2,041.63) |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவு | | (15,814.59) | (12,737.28) | (15,814.59) | (12,684.88) |
| விமானிகளுக்கான செலவினம் | | (6,035.58) | (5,435.73) | (6,035.58) | (5,435.73) |
| ஏனைய தொழிற்படு செலவினங்கள் | | (9,689.48) | (10,703.55) | (8,730.78) | (10,453.70) |
| **செயற்பாட்டு நட்டங்கள்** | 22 | (10,395.22) | (7,489.82) | (14,449.98) | (11,269.62) |
| ஏனைய வருமானம் மற்றும் நன்மைகள் | 21 | 570.14 | 501.52 | 5,875.58 | 3,565.27 |
| நிதி மூலமான வருமானம் | 23.1 | 200.62 | 89.95 | 180.99 | 60.09 |
| நிதிச் செலவு | 23.2 | (8,954.77) | (7,053.10) | (8,820.16) | (6,922.92) |
| விமானக் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்தல் மூலமான இழப்பீடு | 18.1 | - | (14,362.81) | - | (14,362.81) |
| **வரிக்கு முந்திய நட்டம்** | | (18,579.23) | (28,314.26) | (17,213.57) | (28,929.99) |
| வருமான வரிச் செலவினம் | 24 | (5.92) | (25.25) | - | - |
| **ஆண்டுக்கான நட்டம்** | | (18,585.15) | (28,339.51) | (17,213.57) | (28,929.99) |

59 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புக்களும், இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

# விரிவான வருமான அறிக்கை

| | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| **மார்ச் 31 இல் உள்ளவாறு** | | 2018 | 2017 | 2018 | 2017 |
| | குறிப்பு | இ.ரூ மில். | இ.ரூ மில். | இ.ரூ மில். | இ.ரூ மில். |
| **ஆண்டிற்கான நட்டம்** | | (18,585.15) | (28,339.51) | (17,213.57) | (28,929.99) |
| ஏனைய விரிவான வருமானம் / (நட்டம்) | | | | | |
| **ஏனைய விரிவான வருமானம் / (நட்டம்) அடுத்து வரும் காலப் பகுதியில் இலாபம் அல்லது இழப்பிற்காக மீள வகைப்படுத்தப்பட முடியாதவை (நிகர வரி):** | | | | | |
| ஓய்வூகால நன்மைக் கடப்பாடுகள் மீதான **வருமானம்/(நட்டம்)** | 16.2 | 384.44 | 302.69 | 372.53 | 254.20 |
| ஆதனங்கள், உபகரணங்கள் மீதான மீள் மதிப்பீடு | | 616.81 | - | 616.81 | - |
| | | 1,001.25 | 302.69 | 989.34 | 254.20 |
| **ஏனைய விரிவான வருமானம் / (நட்டம்) இலாபம் அல்லது அடுத்துவரும் காலப்பகுதியில் இழப்பிற்காக மீள்வகைப்படுத்தப்படவுள்ளவை (நிகர வரி)** | | | | | |
| காசுப் பாய்ச்சல் பாதுகாப்பு மீதான தேறிய அசைவு | | (205.47) | 690.41 | (205.47) | 690.41 |
| | | (205.47) | 690.41 | (205.47) | 690.41 |
| **ஆண்டுக்கான ஏனைய மொத்த விரிவான வருமானம்/ (நட்டம்) வரி நீங்கலாக** | | 795.78 | 993.10 | 783.87 | 944.61 |
| **மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) வரி நீங்கலாக** | | (17,789.37) | (27,346.41) | (16,429.70) | (27,985.38) |

59 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புக்களும், இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

# பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய அறிக்கை

| குழுமம்<br>மார்ச் 31 இல் உள்ளவாறு | கூறப்பட்ட மூலதனம்<br>இ.ரு மில். | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்<br>இ.ரு மில். | காசுப் பாய்ச்சல் பாதுகாப்பு ஒதுக்கம்<br>இ.ரு மில். | ஒன்றுதிரட்டிய நட்டம்<br>இ.ரு மில். | மொத்தம்<br>இ.ரு மில். |
|---|---|---|---|---|---|
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 4,338.90 | (818.04) | (135,585.41) | (80,447.11) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (28,339.51) | (28,339.51) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 690.41 | 302.69 | 993.10 |
| மொத்த விரிவான வருமானம் / (நட்டம்) | - | - | 690.41 | (28,036.82) | (27,346.41) |
| காலப்பகுதியில் அகற்றல் காரணமாக மீள் மதிப்பீடு மீதான மாற்றம் | - | (1.91) | - | 1.91 | - |
| **2017 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 4,336.99 | (127.63) | (163,620.32) | (107,793.52) |
| காலப்பகுதியில் அகற்றல் காரணமாக மீள் மதிப்பீடு மீதான மாற்றம் | - | (0.32) | - | 0.32 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (18,585.15) | (18,585.15) |
| ஏனைய விரிவான வருமானம் | - | 616.81 | (205.47) | 384.44 | 795.78 |
| மொத்த விரிவான வருமானம் / (நட்டம்) | - | 616.81 | (205.47) | (18,200.71) | (17,789.37) |
| **2018 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 4,953.48 | (333.10) | (181,820.71) | (125,582.89) |

| கம்பனி<br>மார்ச் 31 இல் உள்ளவாறு | கூறப்பட்ட மூலதனம்<br>இ.ரு மில். | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்<br>இ.ரு மில். | காசுப் பாய்ச்சல் பாதுகாப்பு ஒதுக்கம்<br>இ.ரு மில். | ஒன்றுதிரட்டிய நட்டம்<br>இ.ரு மில். | மொத்தம்<br>இ.ரு மில். |
|---|---|---|---|---|---|
| **2016 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 2,499.01 | (818.04) | (141,079.67) | (87,781.26) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (28,929.99) | (28,929.99) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | 690.41 | 254.20 | 944.61 |
| மொத்த விரிவான வருமானம் / (நட்டம்) | - | - | 690.41 | (28,675.79) | (27,985.38) |
| **2017 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி** | 51,617.44 | 2,499.01 | (127.63) | (169,755.46) | (115,766.64) |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (17,213.57) | (17,213.57) |
| ஏனைய விரிவான வருமானம் | - | 616.81 | (205.47) | 372.53 | 783.87 |
| மொத்த விரிவான வருமானம் / (நட்டம்) | - | 616.81 | (205.47) | (16,841.04) | (16,429.70) |
| 2018 மாச்சு 31இல் உள்ளவாறான மீதி | 51,617.44 | 3,115.82 | (333.10) | (186,596.50) | (132,196.34) |

59 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புக்களும், இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

# காசுப் பாய்ச்சல் அறிக்கை

| மார்ச் 31 இல் உள்ளவாறு | குறிப்பு | குழுமம் 2018 இ.ரூ மில். | குழுமம் 2017 இ.ரூ மில். | கம்பனி 2018 இ.ரூ மில். | கம்பனி 2017 இ.ரூ மில். |
|---|---|---|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/ (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல் | | | | | |
| வருமான வரிச் செலவுகளுக்கு முன்னான நட்டம் | | (18,579.23) | (28,314.26) | (17,213.57) | (28,929.99) |
| **பின்வருவனவற்றிற்கான சீராக்கங்கள்** | | | | | |
| தேய்மானம்/பதிவழிப்பு/பெறுமதி நட்டம் | | 1,987.28 | 2,337.54 | 1,779.49 | 2,041.63 |
| நிதிச் செலவு | 23.2 | 8,954.77 | 7,053.10 | 8,820.16 | 6,922.92 |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, சாதனங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனை மீதான நட்டம்/(இலாபம்) | | 14.41 | (24.50) | 14.14 | (2.99) |
| நிதி மூலமான வருமானம் | 23.1 | (200.62) | (89.95) | (180.99) | (60.09) |
| பெறத்தக்க பெறுமதியிழப்பிற்கான ஏற்பாடு | | 172.92 | 781.36 | 172.92 | 728.96 |
| விமானக் குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமை மீதான முன்னைய பிணைய வைப்பு | | - | 1,095.30 | - | 1,095.30 |
| மெதுவாக அசையும் இருப்பிற்கான ஏற்பாடு | 9.1 | 251.60 | 797.40 | 251.60 | 797.40 |
| பேணல் ஒதுக்குகளின் பெறுமதி குறைப்பிற்கான ஏற்பாடு | 6.2 | 3,948.95 | 2,637.43 | 3,948.95 | 2,637.43 |
| தேறல் செய்யப்படாத செலாவணி இழப்பு மீதான தாக்கம் | | 976.32 | 2,468.01 | 807.18 | 3,168.30 |
| முன்கூட்டிய விற்பனைகளின் மீள்பதிவு | | (1,628.86) | (2,462.04) | (1,628.89) | (2,462.04) |
| பணிக்கொடை மீதான ஒதுக்கம் | 16.2 | 1,028.16 | 964.07 | 939.80 | 888.07 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு நட்டம்** | | (3,074.30) | (12,756.54) | (2,289.21) | (13,175.10) |
| இருப்புக்களின் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | | (504.91) | (369.55) | (457.54) | (319.63) |
| ஊர்திகளின் முன்கூட்டிய விற்பனையில் ஏற்பட்ட அதிகரிப்பு | | 6,479.19 | 3,670.35 | 6,479.19 | 3,670.35 |
| வியாபாரம் மற்றும் ஏனைய பெறத்தத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | (3,171.90) | (2,132.71) | (3,102.50) | (2,195.89) |
| வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு/(வீழ்ச்சி) | | 5,982.62 | 5,084.04 | 4,692.92 | 4,972.35 |
| பேணல் ஒதுக்குகளில் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | (7,464.64) | (6,960.78) | (7,464.64) | (6,960.78) |
| விமானப் பிணைய வைப்புக்களில் அதிகரிப்பு | | (60.87) | (289.37) | (60.87) | (289.37) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) உருவாக்கப்பட்ட காசு | | (1,814.81) | (13,754.56) | (2,202.65) | (14,298.07) |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவு | | (8,891.94) | (7,092.71) | (8,757.33) | (6,962.53) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 16.2 | (502.10) | (414.66) | (449.16) | (390.98) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில்/பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | (11,208.85) | (21,261.93) | (11,409.14) | (21,651.58) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல் | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 176.52 | 89.95 | 165.26 | 60.09 |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் கொள்வனவு | | (1,566.90) | (1,131.77) | (1,295.98) | (921.14) |
| குறுகியகால முதலீட்டு மதிப்பீடு/(முதலீடு) | | (419.78) | 2,219.63 | (267.78) | 2,219.63 |
| விமான விநியோகங்கள் மூலமான நிகர (முற்கொடுப்பனவு)/பெறுகைகள் | | - | (108.04) | - | (108.04) |
| தெரிவு செய்யப்படாத சொத்துக்களை கையகப்படுத்தல் | | (106.96) | (146.28) | (84.00) | (121.01) |
| சொத்து, பொறி மற்றும் சாதனங்களின் விற்பனையிலிருந்து கிடைத்த பெறுகைகள் | | 1.26 | 27.36 | 1.24 | 3.94 |
| **தேறிய நிதி (பயன்படுத்தப்பட்ட)/ வருமதி நடவடிக்கைகள்** | | (1,915.86) | 950.85 | (1,481.26) | 1,133.47 |
| **காசுப் பாய்ச்சல் (பயன்படுத்தப்பட்ட)/ நிதி நடவடிக்கைகள்** | | | | | |
| வட்டி சம்பாதிக்கும் பொறுப்புக்களின் மீள்கொடுப்பனவு | | (8,236.44) | (11,258.27) | (8,182.68) | (11,256.29) |
| வட்டி சம்பாதிக்கும் கடன்கள் மற்றும் கடன்பாடுகளில் இருந்தான பெறுகைகள் | | 27,226.48 | 26,172.36 | 27,008.03 | 26,172.36 |
| **தேறிய காசு / (பயன்படுத்தப்பட்ட) நிதி நடவடிக்கைகள்** | | 18,990.04 | 14,914.09 | 18,825.35 | 14,916.07 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/(வீழ்ச்சி) | | 5,865.33 | (5,396.99) | 5,934.95 | (5,602.04) |
| வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 11 | (5,780.89) | (383.90) | (6,210.92) | (608.88) |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | 11 | 84.44 | (5,780.89) | (275.97) | (6,210.92) |

59 தொடக்கம் 99 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளும், குறிப்புக்களும், இந்நிதிக்கூற்றுக்களின் முக்கிய பகுதியாக விளங்குகின்றன.

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

## 1. கூட்டிணைப்புத் தகவல்கள்

### *1.1 பொது*

**கம்பனி**

சிறிலங்கன் எயார்லையின்ஸ் லிமிடெட் ("கம்பனி") இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் தொழிற்படும் கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் பிரதான வியாபாரத் தலமும் எயார்லையின்ஸ் நிலையம், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

ஒன்று திரட்டப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிறுவனம் மற்றும் அதன் இணை நிறுவனங்கள் அனைத்தினதும் தரவுகளும் காணப்படுகின்றன. (மொத்தமாக குழுமம் என அழைக்கப்படும்) நிறுவனத்திற்கு குறிப்பிட்டுக் கூறும் அளவு தாய் நிறுவனம் ஒன்று இல்லை. எனவே, நிறுவனமே தனது தாய் குழுமமாகச் செயற்பட்டு வருகின்றது.

### *1.2 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாட்டின் தன்மையும்*

**கம்பனி**

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகளின் போக்குவரத்திற்காக சர்வதேச ரீதியாக அட்டவணையிடப்பட்ட, அட்டவணையிடப்படாத வான் பணிகளைத் தொழிற்படுத்துதல், இலங்கைக்கான குறித்துரைக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனமாக சரக்கு மற்றும் அஞ்சல் பணிகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலும், மத்தள ராஜபக்' சர்வதேச விமான நிலையத்திலும் வான் முனைக் கோடிப் பணிகளை வழங்குதல், விமானத்தில் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, விடுமுறைக்கால உள்நாட்டு, வெளிநாட்டு பயண வசதிப் பொதிகளைச் சந்தைப்படுத்தல் என்பன ஏனைய முக்கிய பணிகளுக்குள் உள்ளடங்குகின்றன. மூன்றாம் தரப்பினருக்கு பராமரிப்புப் பணிகளை வழங்குதல், பறப்புத் தொழிற்பாட்டு பணிகள் மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளுள் அடங்குகின்றன.

**துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்**

சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்டின் பிரதான நடவடிக்கை யாதெனில் ("துணை நிறுவனம்") பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாகவும், மத்தள ராஜபக்' சர்வதேச விமான நிலையத்தினூடாகவும் தொழிற்படுகின்ற விமான நிறுவனங்களுக்கு பறப்புக்களுக்குள்ளேயான உணவு வசதிகளை வழங்குவதாகும். மற்றைய துணை நடவடிக்கைகள் பொதுமக்கள் மற்றும் மாறிச் செல்லும் பயணிகளுக்காக உணவகங்களை நடத்துதல், சலவைப் பணிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் மாறிச்செல்லும் பயணிகளுக்கான சுற்றுலா விடுதியை முகாமைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

### *1.3 வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி*

2018 மாச்சு 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2019 பெப்ரவரி 28 திகதியில் இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கிணங்க வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### *2.1 தயாரிப்பிற்கான அடிப்படை*

சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டிருக்கும் காணி, கட்டடம், விமான சமையலறைச் சாதனங்கள் தவிர்ந்த கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் ஒன்று சேர்ந்த அடிப்படையில் வரலாற்று அடிப்படையிலான செலவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளதுடன் அனைத்துப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாவிற்கு அணித்தான முழு எண்ணிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

#### 2.1.1 இணங்குவிப்பு கூற்று

நிதியியல் கூற்றுக்களுக்கான கம்பனியினதும் குழுமத்தினதும் நிதியியல் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டன. இந்நிதியங்களின் தயாரிப்பும் சமர்ப்பிப்பும் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் இணங்க மேற்கொள்ளப்பட்டன.

#### 2.1.2 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

குழுமத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளும் மதிப்பீடுகளும் முன்னைய நிதியியல் ஆண்டுகளின் அத்தகைய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகளுடன் ஒத்துச்செல்வனவாகக் காணப்பட்டன.

நடைமுறை ஆண்டின் சமர்ப்பித்தலை உறுதிப்படுத்தும் தேவை காணப்பட்ட போதெல்லாம் முன்னைய ஆண்டின் எண் தொகைகளும் கோட்பாடுகளும் மீள ஒழுங்குபடுத்தப்பட்டன. நிதியியல் கூற்றுக்களுக்குச் செய்யப்பட்ட மீள் வகைப்படுத்தல்கள் குறிப்பு 30இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### *2.2 ஒன்றுதிரட்டலுக்கான அடிப்படை குறிப்புக்கள்*

ஒன்றுதிரட்டிய நிதியியல் கூற்றுக்கள், 2018 மாச்சு 31இல் உள்ளவாறு கம்பனியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கியுள்ளன. குழுமமானது வெளிக்காட்டப்படும் பொழுது அல்லது முதலீட்டினை மேற்கொண்டவரிடம் தொடர்பானவற்றிலிருந்தான வேறுபட்ட வருமானங்கள் மற்றும் முதலீட்டினைக் கொண்டவரிடமிருந்து அதன் அதிகாரத்தினூடாக அவ்வருமானத்தினைப் பெறக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும் பொழுது அது உரிமையைக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, கம்பனியானது பின்வருவனவற்றைக் கொண்டிருந்தால் மட்டுமே முதலீட்டினை மேற்கொண்டவரைக் கட்டுப்படுத்த முடியும்.

- முதலீட்டைப் பெற்றவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் (அதாவது முதலீட்டைப் பெற்றவர் தொடர்பான நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதனை தற்பொழுது இயலச்செய்வதாக இருக்கும் ஏற்கனவேயுள்ள உரிமைகள்)
- முதலீட்டினைப் பெற்றவர்களுடன் இதற்குள்ள தொடர்பானவற்றிலிருந்து கிடைக்கின்ற பல்வேறு வருவாய்களுக்கான வெளிப்படுத்துகை அல்லது உரிமைகள்
- இதன் வருவாய்களினைப் பெறுவதற்காக முதலீட்டினைப் பெற்றவர்களை அதிகாரம் செய்யக்கூடிய விதத்தில் அதன் அதிகாரங்களைப் பயன்படுத்துல்.

மூன்று அம்சங்களில் ஒன்றில் அல்லது கூடுதலானவற்றிற்கு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான உண்மையான தன்மை அல்லது சூழ்நிலை ஏற்படுமிடத்து முதலீட்டினைப் பெற்றவரை கட்டுப்படுத்துவதா இல்லையா என்பது பற்றி மீள மதிப்பீடு செய்யும். துணை நிறுவனத்தினை குழுமம் கட்டுப்படுத்தும் போது துணை நிறுவனத்தின் திரட்சிப்படுத்தல் ஆரம்பமாவதுடன் துணை நிறுவனத்தின் கட்டுப்பாடுகளைக் கம்பனி இழக்கும் பொழுது அது நிறுத்தப்படுகிறது.

இலாபம் அல்லது நட்டம் மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தின் ஒவ்வொரு கூறும் கம்பனியின் பங்குரிமை மூலதன உடமையாளர்களுக்குரியதாகும். அவசியமான பொழுது துணை

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்களை குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கிக்கொண்டு வருவதற்காக அதன் கணக்கீட்டுக்கொள்கைகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து உள்ளகக் குழுமத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பங்குரிமை மூலதனம் செலவுகள் மற்றும் குழுமத்தின் உறுப்பினர்களிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான காசுப்பாய்ச்சல்கள் என்பன திரட்சிப்படுத்தல் தொடர்பில் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாடு இழக்கப்படாமல் துணை நிறுவனத்தின் சொத்துடமை ஈடுபாடுகளில் ஏற்படும் மாற்றமானது பங்குரிமை மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் போது கணக்கில் கொள்ளப்படுகிறது.

குழுமம் துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டினை இழந்துவிடின், இது தொடர்பான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமையின் ஏனைய முக்கிய கூறுகளினை அங்கீகரிக்காமல் செய்யும் அதேவேளையில் ஏதேனும் தோன்றுகின்ற இலாபங்கள் அல்லது இழப்புக்கள் இலாபத்தில் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகின்றன. வைத்திருக்கப்படும் ஏதேனும் முதலீடு சந்தைப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

### *2.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருதுகோள்களும் தீர்வுகளும்*

குழுமத்தின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, அறிக்கையிடும் திகதியன்றுள்ள அறிவிக்கப்பட்ட சொத்துக்களின் தொகை, பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு மற்றும் வெளிப்படுத்துகை என்பனவற்றைப் பாதிக்கும் தீர்ப்பு, மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பனவற்றை முகாமைத்துவம் பேணுவதனைத் தேவைப்படுத்துகின்றது. முக்கியமான தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் இணைந்த கருதுகோள்கள் தற்போதைய அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்பார்க்கப்படும் எதிர்காலச் சம்பவங்கள் உட்பட வரலாற்று ரீதியான அனுபவங்களையும் மற்றைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

விடயம் சார்ந்த மற்றைய விடயங்களிடையே பின்வரும் முக்கிய தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன நிதியியல் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகைகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டுள்ளன.

#### (அ) தீர்ப்புக்கள்

(i) தொடர்ந்து செல்லும் கரிசனை குறிப்பு 3இல்

வெளிப்படுத்தப்பட்டவாறு இந்நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து வரும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ii) எதிர்பாராத பொறுப்புக்கள் - வழக்காடல்கள்

நடப்பு நிதி ஆண்டின் முடிவில் குழுமம் குறிப்பு 25.3இல் வெளிப்படுத்தப்பட்டவாறு பல்வேறு தரப்பினருடனுமான பல்வேறுபட்ட வழக்குகளை நிலுவையில் வைத்திருந்தது. பணிப்பாளர் சபை கம்பனியின் சொலிசிஸ்டர்களுடன் மேற்கொண்ட தகுந்த ஆலோசனைகளின் பின்னர், ஒவ்வொரு வழக்கினதும் தகுதியினை மதிப்பிட்டு, எதிர்காலத்தில் மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று ஏற்படக்கூடிய சாத்தியமிருக்கும் என தீர்மானித்த பொழுது தேவையான ஒதுக்கங்களை மேற்கொண்டது.

(iii) நிதி மற்றும் தொழிற்படுகின்ற குத்தகைகள் சொத்துடமையின் அனைத்து இடர்நேர்வுகளும்

வெகுமதிகளும் கணிசமானளவிற்கு மாற்றல் செய்யப்படுகின்ற பொழுது குத்தகையொன்று நிதிக் குத்தகையென வகைப்படுத்தப்படுகிறது. பொருத்தமான வகைப்படுத்தலை தீர்மானிக்கையில், அதன் வடிவத்தினைவிட கொடுக்கல் வாங்கல்களின் அளவு பரிசீலனையில் கொள்ளப்படுகிறது. பரிசீலிக்கப்பட்ட காரணிகள் உள்ளடக்கப்பட்டனவெனினும் அவை பின்வருவனவற்றிற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. குத்தகைக் காலம் முடிவடைகையில் சொத்தின் உடமை குத்தகைத்தாரருக்கு மாற்றல் செய்யப்படுமாயின், அது நிறைவேற்றப்படும் நாளன்று உள்ள சந்தைப் பெறுமதியிலும் பார்க்கப் பெருமளவிற்குக் குறைவான விலையில் அச்சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் தேர்வினை குத்தகைக்காரர் கொண்டிருப்பார். குத்தகைக் காலம் சொத்தின் பொருளாதார ஆயுள் காலத்தில் பெரும்பகுதியைக் கொண்டதாக இருந்து உறுதி மாற்றல் செய்யப்படாதிருப்பினும் கூட, குத்தகையின் தொடக்கத்தில் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதி குத்தகைக்குவிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினைவிட கணிசமானளவு குறைவாகவே இருக்கும்.

#### (ஆ) மதிப்பீடுகள்

(i) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றும் அருவச் சொத்துக்கள் என்பனவற்றின் தேய்மானம்/பதிவழிப்பு

சொத்துக்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடு மற்றும் அச்சொத்துக்கள் பொருளாதார ரீதியாக பயன்படும் காலம் என்பனவற்றின் அடிப்படையில் முகாமைத்துவம், சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பயன்படக்கூடிய காலம் மற்றும் மீதிப் பெறுமதி என்பனவற்றை வழங்குகின்றது. ஒவ்வொரு ஐந்தொகை நாளன்றும் முகாமைத்துவம் எஞ்சிய பெறுமதிகள், பயன்மிக்க வாழ்நாள் காலம் மற்றும் தேய்மான முறை என்பனவற்றை மீளாய்வு செய்து முன்னைய மதிப்பீடுகள் மற்றும் இச்சொத்துக்களின் விடயங்களை செயன்முறைப்படுத்துகின்ற முன்னைய மதிப்பீடுகள் மற்றும் பொருளாதார நன்மைகளின் நுகர்வு மாதிரி என்பனவற்றுடன் ஒத்துச் செல்வதனையும் உறுதிப்படுத்தியது. பயனுள்ள வாழ்நாள் காலம் மற்றும் இச்சொத்துக்களின் மீதிப் பெறுமதி என்பனவற்றின் மாற்றங்கள் எதிர்கால தேய்மானத்தின் விதிப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். (கொள்கை 2.4.3 (ஆ) மற்றும் 2.4.4 இனைப் பார்க்கவும்).

(ii) அடிக்கடிப் பறக்கும் பிளையர் நிகழ்ச்சித்திட்டம்

வெகுமதி விருதுகள் வருமானக் கூற்றில் தனியாக அடையாளம் காணப்படுபவைகளாகவுள்ளன. வெகுமதி விருதுகளுக்கான தொகைகள் அவர்களது சந்தைப் பெறுமதியின் அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் நிதியியல் நிலைமையின் திரட்டப்பட்ட கூற்றில் பொறுப்பொன்றாக (பிற்போடப்பட்ட வருமானம்) கணக்கிடப்பட்டிருக்கின்றன.

மதிப்பீட்டு நுணுக்கங்கள், மைல்களின் வெகுமதிகளின் சந்தைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் இது பல்வேறு காரணிகளின் அதாவது, துறையொன்றிற்கான கட்டணம், பறப்புக்களை தரமுயர்த்தல், பங்காளர்களின் வெகுமதி போன்றவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியினையும் பிரதிபலிக்கிறது. வரலாற்றியல் போக்கு சந்தைப் பெறுமதிக் கணிப்பிற்கான அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது.

மைல்களின் சந்தைப் பெறுமதிக்கான சீராக்கங்கள் உறுப்பினர்களினால் மீட்டுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படாதவற்றிற்கும் காலாவதியான மைல்களுக்குமாகவும் மேற்கொள்ளப்பட்டன.

மைல்களின் சந்தைப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பல்லின உள்ளீடுகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அவற்றைத் தீர்மானிக்கின்ற அளவொன்று முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படுகிறது.

(iii) பராமரிப்பு ஒதுக்கு

பராமரிப்புத் தொடர்பான இணங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில், தொழிற்படுகின்ற குத்தகைகளின் கீழுள்ள பல்வேறு விமானங்கள் மற்றும் எந்திரங்களின் பேரில் கம்பனியானது குத்தகைக்காரர்களுக்கு

கொடுப்பனவினைச் செய்கிறது. இம்மாதாந்த கொடுப்பனவுகள் பறக்கும் மணித்தியாலங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அறவிடத்தக்க தொகை தொடர்பான சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் முகாமைத்துவம் அறவிடத்தக்க அத்தகைய கொடுப்பனவுகளை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்கிறது. சொத்தொன்றின் ஏட்டுப் பெறுமதித் தொகை அளவிடத்தக்க தொகையினைவிட விஞ்சும் பொழுது சொத்தின் பெறுமதி இழப்புக் கூடியது எனக் கருதப்படுவதுடன் அதன் அளவிடத்தக்க தொகைக்குப் பதிவழிப்பு செய்யப்படுகிறது. (குறிப்பு 6 இனைப் பார்க்கவும்)

(iv) விமானங்களின் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் செலவுகளுக்கான ஏற்பாடு

பேணல் தொடர்பாக இணங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழுள்ள விமானத்தின் உடற்பாகம், எந்திரங்கள் மற்றும் தரையிறக்கங்கள் சாதனங்களை பாரிய பேணல் நடவடிக்கைகளுக்குட்படுத்தி பரிசோதிப்பது கம்பனியின் பாரிய கடப்பாடாகும். பாரிய பேணல் செலவிற்கான ஏற்பாடுகள் பறப்புக்களின் மணித்தியாலங்கள் அல்லது சுற்றுக்களின் எண்ணிக்கையினது அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற பொழுது / பரீட்சிப்புக்களை மேற்கொள்கின்ற நேரத்தில் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட நிலையில் ஏற்படக்கூடிய பொருட்களினதும் பழுதுபார்த்தலினதும் செலவு, பரீட்சிப்புக்களை மேற்கொள்ளக்கூடிய நேரம் என்பன அனுமானத்தில் கொள்ளப்படுகின்றன. இந்த அனுமானங்கள் கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் உண்மைக்கு அணித்தான தன்மைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கிரமமாக மீளாய்வு செய்து கொள்ளப்படுகின்றன. ஏற்பாடுகளின் மீது குறிப்பிடத்தக தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அனுமானங்களிலும் மதிப்பீடுகளிலும் செய்யப்படும் ஏதேனும் திருத்தங்கள் நிதியியல் கூற்றுக்களில் சாத்தியமானளவிற்குச் சரியாக சீராக்கப்படும்.

(v) நேரடித் தொழிற்பாட்டுச் செலவுகளுடன் தொடர்புபட்ட விமானப் போக்குவரத்துப் பணிகளுக்கான ஏற்பாடுகள்

விமானப் போக்குவரத்துப் பணிகளின் தொழிற்பாடுகள் எரிபொருள், தரைக் கையாளல் கட்டணங்கள், தரையிறக்கல் மற்றும் தரிப்பிடக் கட்டணங்கள், பறப்புக்களுக்குள்ளேயான உணவு, ஆசன ஒதுக்கீட்டு முறைமைகளின் கட்டணம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான செலவினங்கள் போன்ற நேரடிச் செலவுகள் மீதான பல்வேறு ஏற்பாடுகளினைச் செய்வதுடன் தொடர்புபட்டனவாக இருப்பது தவிர்க்க முடியாததொன்றாகும். மதிப்பீடுகளும் அவற்றுடன் இணைந்த அனுமானங்களும் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நியாயமானவையெனெ நம்பப்படும் பல்வேறு காரணிகளின் அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் அவற்றின் பெறுபேறுகள் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான அடிப்படையினை உருவாக்குகின்றன.

(vi) இருப்புக்கள்

கம்பனி பூர்வாங்க இருப்புக் கணக்கெடுத்தல் அடிப்படையில் கம்பனி இருப்புக்களின் நிலைபேற்றுத்தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை என்பனவற்றை மீளாய்வு செய்கிறது. பழைய இருப்பு அத்துடன்/அல்லது அறவிடத்தக்க பெறுமதியின் மதிப்பிடத்தக்க குறைப்பு பற்றி முகாமைத்துவம் தீர்மானிக்கும் பொழுது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(vii) நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி இழக்கும் தன்மை

குழுமமானது ஏதேனும் சொத்துக்கள் பெறுமதியிழக்கக்கூடிய அறிகுறிகள் எதனையாவது கொண்டிருக்கின்றனவா என்பதனை ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மதிப்பீடு செய்கின்றது. அத்தகைய பெறுமதி இழப்பினை மதிப்பிடுவதற்கு முகாமைத்துவம் வெளிநின்ற காலப்பகுதியை பரிசீலனையில் கொள்வதுடன் ஏனைய ஏதேனும் காரணிகள் என்பது முகாமைத்துவ அறவிடல்களிலுள்ள நிச்சயமற்றதன்மையினை எடுத்துக்காட்டும்.

(viii) நிதிச் சொத்துக்களின் பெறுமதி இழக்கும் தன்மை

குழுமமானது ஏதேனும் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்களின் தொகுதி பெறுமதி இழக்கக்கூடியதாகவுள்ளது என்பதற்கு ஏதேனும் சான்று பொருட்கள் உள்ளனவா என்பது பற்றி ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் மதிப்பீடு செய்கிறது. முகாமைத்துவமானது அத்தகைய பெறுமதி இழப்புக்களை மதிப்பிடுவதற்கு அவை வெளிநின்ற காலப்பகுதியினையும் அறவிடல்கள் ஐயத்திற்குரியவை என்பதனை எடுத்துக்காட்டும் ஏனைய காரணிகளையும் பரிசீலனையில் கொண்டு அவற்றைப் பயன்படுத்துகிறது.

(ix) தாமத வரி

தாமத வரி (சொத்துக்கள்) மற்றும் பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு குறிப்பு 24 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சகல விதமான வரிக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் கழிக்கப்பட வேண்டிய தற்காலிக வித்தியாசங்கள் கணக்கியல் அடிப்படைகள் மற்றும் வரி அடிப்படைகளுக்கு அமையவும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு அமையவும் ஏற்படும் வித்தியாசங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. தாமத வரி கணக்கிடப்படும் போது, தற்காலிக வித்தியாசங்களுக்கு வரி / கழிவுகள் கணக்கிடப்படுமா என்பதைத் தீர்மானிப்பதில் ஒரு பிரதான தேவைப்பாடு காணப்பட்டது. எதிர்காலத்தில் கணக்குகளில் காண்பிக்க / வெளிப்படுத்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிட இவை எடுத்துக் கொள்ளப்படுமா என்பது கேள்விக்குரியதானது.

(இ) கருதுகோள்கள்

(i) வரைவிலக்கணம் செய்யப்பட்ட நன்மைகள் திட்டம்

இலங்கையிலுள்ள அலுவலர்களின் ஓய்வுகால நன்மைகள் திட்டத்தின் செலவு உண்மையான மதிப்பீட்டினைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. உண்மையான பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதம், சிறப்பு இலாபக் கட்டணம், ஓய்வு பெறும் வயது மற்றும் தற்பொழுது நடைபெற்று வரும் கம்பனியின் தொழிற்பாடு என்பனவற்றைக் கருத்திற் கொண்ட கருதுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திட்டத்தின் நீண்டகாலத் தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்களவு நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டனவாகவுள்ளன. (குறிப்பு 2.4.16 இனைப் பார்க்கவும்)

(ii) சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் மீள் மதிப்பீடு

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள், சுதந்திரமான தகுதி வாய்ந்த மதிப்பிட்டாளரொருவரின் பணியினைப் பயன்படுத்தி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அறவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் சந்தைப் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு கருதுகோள்களையும் மதிப்பீட்டு தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டிற்கான அடிப்படைக் குறிப்பு 4இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு

2.4.1 வெளிநாட்டு நாணய மாற்று

நிதியியல் கூற்றுக்கள் கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாவில் காட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், ஆரம்பத்தில் கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான தொழிற்பாட்டு நாணய வீதத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

ஐந்தொகை நாளில் நிலவும் செலாவணியின் தொழிற்பாட்டு நாணய வீதத்தில் மீளமாற்றப்படுகின்றன. அதன் மூலம் தோன்றிய வெளிநாட்டுச் செலாவணி இலாபம் மற்றும் இழப்புக்கள் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான செலவின் நியதிகளில் அறவிடப்பட்ட நாணயமல்லா விடயங்கள் ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியிலுள்ளவாறான செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றல் செய்யப்பட்டன.

### 2.4.2 வரி விதிப்பு

#### (i) நடைமுறை வருமான வரி

கம்பனி

*(அ) உள்நாட்டு வரி விதிப்பு*

2011ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் (திருத்தங்கள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் திருத்தப்பட்டவாறான 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனி அதன் வியாபார நடவடிக்கைகள் அனைத்திற்கும் 2011 ஏப்பிறல் 1இலிருந்து 2021 மாச்சு 31 வரையான 10 ஆண்டு காலப்பகுதிக்கு வரி விலக்கிற்கு உரித்துடையதாகும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் செயற்படுத்தலுக்கு அமைய 2018 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நிறுவனத்தின் சகல வர்த்தக செயற்பாடுகளுக்கும் நிறுவனம் வரி செலுத்த வேண்டும்.

*(ஆ) வெளிநாட்டு வரி விதிப்பு*

கம்பனி இரட்டை வரி விதிப்பு உடன்படிக்கைகள் இல்லாத நாடுகளில் மேற்கொள்கின்ற அதன் வெளிநாட்டுத் தொழிற்பாடுகளுக்கு வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும். எனினும், கம்பனிக்கு வரி இழப்புக்களை முன்கொண்டு செல்லத்தக்க வசதி கிடைக்கத்தக்கதாக இருப்பதனால் நடப்பாண்டில் வரி செலுத்தும் பொறுப்பு எதுவுமில்லை.

துணை நிறுவனம் - சிறிலங்கன் கேட்டறிங் லிமிடெட்

வருமான வரிச் செலவினம் நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரி இரண்டினையும் உள்ளடக்குகிறது. வருமான வரிச் செலவினம் என்பது பங்கு மூலதனத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானவற்றின் அளவு வரையானவை தவிர்ந்த இலாபம் அல்லது இழப்பில் அங்கீகரிக்கப்படுகிறது. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை இது பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின்படி வானூர்திகளின் சமயலறை மற்றும் மாறிச்செல்லும் பயணிகளுக்கான உணவகம் என்பனவற்றிலிருந்தான வருமானங்களுக்கு 2021 மே 31ஆம் நாள் வரை வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் வழமையான வரி வீதத்திற்கு உட்பட்டனவாகும்.

#### (ii) பிற்போடப்பட்ட வருமான வரி

சிறிலங்கன் எயார்லையின்ஸ் ஆண்டறிக்கை 2016/17 பிற்போடப்பட்ட வருமான வரியானது, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றின் ஏட்டுப் பெறுமதி என்பனவற்றிற்கிடையில் அறிக்கையிடும் திகதியன்று காணப்படும் தற்காலிக வேறுபாடுகளின் மீதான பொறுப்பு முறைகளைப் பயன்படுத்தி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### 2.4.3 சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

*(அ) கிரயம் மற்றும் மதிப்பீடு*

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என்பன ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. கிரயத்தினை உள்ளடக்கிய செலவினம் கொள்வனவில் உடனடியாக சேர்க்கப்படுகின்றன. சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படுகையில், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் பின்னர் அவற்றின் மீது இடம்பெற்ற தேய்மானங்கள் மற்றும் பழுதுறும்தன்மை ஏதுமிருப்பின் அதனைக் கழித்து மீள்மதிப்பீட்டுத் தொகைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. மற்றைய அனைத்துச் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் தேய்மானங்கள் ஏதுமிருப்பின் அதனைக் கழித்த வரலாற்றுக் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

நிலம், கட்டடங்கள் மற்றும் விமான சமையலறைச் சாதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளில் அளவிடப்படுவதுடன், ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு, முன்னர் இலாப அல்லது நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியின் மாற்றலின் அளவு தவிர்ந்த மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள பங்குரிமை மூலதனத்தில் சேர்க்கப்பட்டன. இவ்விடயத்தினைப் பொறுத்தவரை அதிகரிப்பானது இலாப அல்லது நட்டக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பு பற்றாக்குறையானது, இது சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள அதே சொத்தின் ஏற்கனவேயிருக்கும் மிகையை எதிரீடு செய்யும் சந்தர்ப்பத்தைத் தவிர, மற்றைய சந்தர்ப்பங்களில் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதி ஏட்டுப் பெறுமதித் தொகையிலிருந்தும் பெருமளவிற்கு வேறுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடுகள் போதுமானளவிற்கு அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் ஏற்படும் கிரயங்கள் இவ்விடயங்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு பாய்வதற்கும் கிரயத்தினை நம்பகரமான முறையில் அறவிடத்தக்கதாகவும் இருக்கும் சாத்தியத்தில் மட்டும் பொருத்தமான விதத்தில் சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் அல்லது தனியானதொரு சொத்தாக உள்ளடக்கப்படுகின்றன.

பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் அவை உறப்பட்ட காலப்பகுதிக்குரிய வருமானக்கூற்றில் விதிக்கப்படுகின்றன.

சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் மற்றைய பல விடயங்களுடன் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

*(i) மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய விமான உதிரிப்பாகங்கள்*

உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்ற மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய விமான உதிரிப்பாகங்கள் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட அதன் பயன்பாட்டு ஆயுள் காலப்பகுதியில் தேய்வடைகின்றன. இவ்விடயம் "விமானம் தொடர்பான சாதனங்கள்" என்ற தொகுதியின் கீழ் உள்ளடக்கப்படுகிறது.

*(ii) செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம்*

செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் கிரயத்தில் காட்டப்படுவதுடன், இது கொள்வனவு செய்யப்பட்ட நாளிலிருந்து அது ஆரம்பிக்கப்படும் நாள் வரையில் ஏற்பட்ட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்குகிறது. தொழிற்படும் பொழுது, செயற்பாட்டிலுள்ள தொழிற்படு மூலதனம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் கீழ் பொருத்தமான வகைக்கு மாற்றல் செய்யப்படுவதுடன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள் காலப்பகுதிக்கு தேய்மானம் செய்யப்படுகிறது.

(ஆ) தேய்மானம்
தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்துச் சொத்துக்கள் பொறிகள் மற்றும் சாதனங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் மீது நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன. சமமான தவணைகளின் மூலம் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுள் காலப்பகுதியில் அத்தகைய தொகையினைப் பதிவழிப்பதற்காக இவை மேற்கொள்ளப்படுகின்றன.

விமானத்துடன் தொடர்புபட்ட - 8 ஆண்டுகளுக்குக் குறைவாக அல்லது குத்தகைக் காலப்பகுதி சாதனங்கள்

பொறிகள் மற்றும் சாதனங்கள் - சாதனங்களினது வகையின் அடிப்படையில் 3 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வீச்சினைக் கொண்ட காலப்பகுதி

கட்டிடங்கள் - எதிர்பார்க்கப்படும் பயன்மிக்க காலப்பகுதி 15 ஆண்டுகளிலிருந்து 50 ஆண்டுகள் வரை

தொழிற்பாட்டுக் குத்தகை தொடர்பான விமானங்களுக்கான மேம்பாடுகள் - 10 ஆண்டுகளுக்கான குறைவான காலம் அல்லது குத்தகைக் காலம்

எஞ்சிய பெறுமதி மற்றும் பயன்மிக்க ஆயுள்காலத் தேய்மான முறையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவிடத்து மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட தேய்மான வீதங்கள் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் காலங்களுக்கும் ஏற்புடையதாகும்.

(இ) அங்கீகரிக்கப்படாதவை
சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் விடயமொன்று அகற்றப்படும் பொழுது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாத பொழுது, அது அங்கீகரிக்கப்படாமல் போகிறது. சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாதமையின் காரணமாக ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது இலாபம் (தேறிய அகற்றல் பெறுகைகளுக்கும் சொத்துக்களின் ஏட்டுப் பெறுமதித் தொகைக்குமிடையிலான வேறுபாடாகக் கணிக்கப்படுகிறது) சொத்துக்கள் அங்கீகரிக்கப்படாது ஆண்டிற்கான நிதியியல்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது.

2.4.4 அருவச் சொத்துக்கள்
அருவச் சொத்துக்கள், அச்சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளியல் நன்மைகள் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதுடன், அச்சொத்துக்களின் கிரயம் நம்பகமாக அளவிடக் கூடியதாக இருக்கும் போது மட்டுமே அருவச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்படுகின்றன. இதன்படி, இச்சொத்துக்கள், கிரயத்திலிருந்து ஒன்று சேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பழுதுறக்கூடிய இழப்புக்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் கழித்து வரும் பெறுமதியில் நிதியியல் நிலைமைக்கூற்றில் காட்டப்படும்.

தொடர்புடைய கணனி வன்பொருளிலிருந்து வேறாக்கக் கூடிய கணனி மென்பொருளின் கொள்வனவு அல்லது அபிவிருத்திச் செலவானது வேறாக மூலதனப்படுத்தப்படுவதுடன் 5 ஆண்டுகளுக்கு விஞ்சாத வகையில் நேர்கோட்டு முறையில் பதிவழிக்கப்படுகின்றன. பதிவழிப்புக் காலம் மற்றும் பதிவழிப்பு முறை என்பன ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மாற்றங்கள் தேறிய பெறுமதி மீளப்பெறப்பட முடியாது என்பதை எடுத்துக்காட்டினால் இச்சொத்துக்களின் தேறிய பெறுமதி பதிவழிப்புக்காக காலாந்தரம் மீளாய்வு செய்யப்படும்.

2.4.5 குத்தகைகள்

(அ) தொழிற்படுகின்ற குத்தகைகள்
குத்தகைக்கு விட்டவர் குத்தகைக்கான நியதிகள் மீதான அனைத்து இடர்நேர்வுகளையும் மற்றும் சொத்துரிமை தொடர்பான நன்மைகளையும் கணிசமானளவில் பயனுள்ள விதத்தில் பிடித்து வைத்திருக்கின்றவிடத்து, குத்தகையானது தொழிற்படுகின்ற குத்தகை எனக் கருதப்படுகிறது. இன்னொரு முறையியல் சார்ந்த அடிப்படை பயன்படுத்துநரின் நன்மைகளிலிருந்து நேர மாதிரியினை கூடியளவிற்கு பிரசன்னப்படுத்தினாலொழிய, தொழிற்படுகின்ற குத்தகைக் கொடுப்பனவுகள் நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் தொழிற்பாட்டுச் செலவினமொன்றாக அங்கீகரிக்கப்படுகிறது.

தொழிற்பாட்டு குத்தகைகளின் கீழ் சொத்துக்களின் மீள்வடிவமைப்பு தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் மூலதனமாக்கப்பட்டு பயனுள்ள ஆயுள் பகுதிக்குள்ளும் குத்தகைக் காலப்பகுதிக்குள்ளும் பதிவழிப்பு செய்யப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கை 2.4.3 இனைப் பார்க்கவும்.

(ஆ) நிதிக் குத்தகைகள்
இடர்நேர்வுகளும் நன்மைகளும் குத்தகைக்கு விடப்பட்ட விடயங்களின் சொத்துரிமைகளுக்கு ஏற்படுமிடத்து பயனுள்ள முறையில் கம்பனிக்கு மாற்றப்படுகின்ற குத்தகைகள் ஆரம்பத்தில் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் அல்லது குறைவாக இருக்குமிடத்து குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவின் தற்போதைய பெறுமதியில் மூலதனமாக்கப்படுகின்றது. பொறுப்பின் எஞ்சியுள்ள மீதியின் மீது நிலையான வட்டி வீதத்தினைப் பெறும் நிமித்தம் நிதிக் கட்டணங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்பின் குறைப்புக்களுக்குமிடையில் குத்தகைக் கொடுப்பனவுகள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.
நிதிக் கட்டணங்கள் வருமானக் கூற்றுக்களில் நிதிச் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

மூலதனமாக்கப்பட்ட குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் என வெளிப்படுத்தப்பட்டு குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களிலிருந்து கம்பனி பலனை எதிர்பார்க்கும் காலப்பகுதி வரை தேய்மானம் செய்யப்படுகின்றன. கணக்கீட்டுக் கொள்கை 2.4.3 இனைப் பார்க்கவும்.

(இ) விற்பனையும் மீள்குத்தகையும்
தொழிற்பாட்டுக் குத்தகைகளில் தோன்றுகின்ற விற்பனை மற்றும் மீள்குத்தகைக் கொடுக்கல்வாங்கல்களின் மீதான இலாபங்கள், குறிப்பிட்ட சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை விற்பனைப் பெறுகைகள் விஞ்சாததொரு அளவிற்கு வருமானக்கூற்றில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன.

2.4.6 இருப்புக்கள்
இருப்புக்கள் குறைந்த செலவு மற்றும் தேறிய தேறல் செய்யப்பட்ட பெறுமதியில் கூறப்படுகின்றன.

இருப்புக்களின் செலவு என்பது கொள்வனவுகளின் அனைத்துச் செலவுகள், மாற்றல் செலவுகள், இருப்புக்களின் தற்போதைய அமைவிடயத்திற்கும் நிலைமைகளுக்கும் அவற்றைக் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட ஏனைய செலவுகளையும் என்பனவற்றின் தொகையாகும்.

நிறையேற்றப்பட்ட சராசரி செலவு முறையானது இருப்புக்களின் செலவினைக் கணிப்பதில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. தேறிய தேறல் செய்யத்தக்க பெறுமதியானது பூர்த்தி செய்தல் தொடர்பான அனைத்து மதிப்பிடப்பட்ட செலவுகளையும் கழித்த மதிப்பிடப்பட்ட விற்பனை

# நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்

விலையினையும் விற்பனை செய்வதற்கு அவசியமான செலவினையும் காட்டுகின்றது.

2.4.7 நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி இழப்பு
